# இறையியல் கோலங்கள்

வடிவம் 42 ஜனவரி - ஜூன் 2021 வண்ணம் 01



- மீட்புத் திட்டத்தில் புனித யோசேப்பு
- திருச்சபையின் பாதுகாவலர் புனித யோசேப்பும் அவர் காட்டும் வாழ்வியல் பண்புகளும்
- தந்தையின் இதயத்துடன் ...
- திருவிவிலியத்தில் கொள்ளைநோய்களை நம்பிக்கையோடு எதிர்கொண்ட விதமும், இன்றைய சூழ்நிலையில் கோவிட் 19 மத்தியிலே இறைபராமரிப்பும்
- கிறிஸ்தவர்களின் புனித யோசப்பின் ஆண்டில், விடுதலை வாழ்வுக்கான புனித யோசப்பின் வழிகாட்டுதல்கள்
- அருளாவர் 9ம் பத்திநாதர்

புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

## தமிழ் இறையியல் அரையாண்டு இதழ்

# IRAI IYAL KOLANKAL

ST. FRANCIS XAVIER'S SEMINARY
LIBRARY
COLOMBUTHURAI

Vol. : 42

No. : 01

January - June : 2021

வடிவம் : 42

வண்ணம் : 01

ஜனவரி - ஜூன் : 2021

புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி

கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் : அருட்தந்தை த. ஜெ. கிருபாகரன்

துணை ஆசிரியர்கள் : அருட்தந்தை தே. செல்வரட்ணம்
அருட்தந்தை ம. ம. கொ. ஞானேந்திரன்

நிர்வாகக் குழு : அருட்சகோ. த. ராஜ் டிலக்ஷன்
அருட்சகோ. செ. ஜெபநேசன்
அருட்சகோ. றோ. றெ. அலெக்சன்
அருட்சகோ. அ. விமல் றோய்
அருட்சகோ. லெ. பிரியதர்ஷன் பெர்னாண்டோ
அருட்சகோ. கி. ஞா. றொகான்

Editor : Rev. Fr. T. J. Kirupaharan

Sub–Editors : Rev. Fr. T. Selvaratnam
Rev. Fr. M. M. H. Gnanendran

Administrative Board : Rev. Bro. T. Raj Dilaxan
Rev. Bro. S. Jebanesan
Rev. Bro. R. R. Alexan
Rev. Bro. A. Vimal Roy
Rev. Bro. L. Priyatharshan Fernando
Rev. Bro. C. G. Rohan

Publication : St. Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna
Sri Lanka

Tel.No. 021 222 2482
021 222 7145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே....

- ஆசிரியரிடமிருந்து ....
  அருட்தந்தை த. ஜெறிபெல் கிருபாகரன்

- மீட்புத் திட்டத்தில் புனித யோசேப்பு
  அருட்தந்தை அ. துசியந்தன்

- திருச்சபையின் பாதுகாவலர் புனித யோசேப்பும் அவர் காட்டும் வாழ்வியல் பண்புகளும்
  அருட்சகோதரன் றோ. அலெக்சன்

- தந்தையின் இதயத்துடன்
  அருட்தந்தை மி. ஜெகன் கூஞ்ஞே அ.ம.தி.

- திருவிவிலியத்தில் கொள்ளைநோய்களை நம்பிக்கையோடு எதிர்கொண்ட விதமும், இன்றைய சூழ்நிலையில் கோவிட் 19 மத்தியிலே இறைபராமரிப்பும்
  அருட்தந்தை அ. கிறிஸ்ரி றூபன் பெர்னான்டோ

- கிறிஸ்தவர்களின் புனித யோசேப்பின் ஆண்டில், விடுதலை வாழ்வுக்கான புனித யோசேப்பின் வழிகாட்டுதல்கள்
  அருட்தந்தை எஸ். ஜே. இம்மானுவேல்

- அருளாளர் 9ம் பத்திநாதர்
  அருட்சகோதரன் N.அஜந்தன் அ.ம.தி.

- Synopsis

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரிடமிருந்து ...

முதலாம் வத்திக்கான் சங்கத்தில் (1869-1870) குழுமியிருந்த முந்நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக திருத்தந்தை 9ம் பத்திநாதர் அவர்களால் 1870, மார்கழி 8ம் நாளில் புனித யோசேப்பு "அனைத்துலக திரு அவையின் பாதுகாவலர்" என ஏற்படுத்தப்பட்டார். பின்னர் 1889 இல், திருத்தந்தை 13ம் லியோ புனித யோசேப்பை "தந்தையர்களின் பாதுகாவலர்" என ஏற்படுத்தினார். திருத்தந்தை 12ம் பத்திநாதர் 1955இல் புனித யோசேப்பை "தொழிளாளர்களின் பாதுகாவலர்" என ஏற்படுத்தினார். நற்செய்தியாளரான மத்தேயுவின் நற்செய்தியில் "நேர்மையாளர்" என்றழைக்கப்படுகின்ற புனித யோசேப்பு "திருஅவை முழுவதற்கும் பாதுகாவலர்" என ஏற்படுத்தப்பட்டதன் (1870) 150 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில், இந்நடப்பு ஆண்டு 2021 புனித யோசேப்பின் ஆண்டாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சிறப்பும் அன்பும் மிக்கவராக புனித யோசேப்பு விளங்கு கிறார். இத்தகைய சிறப்புக்குக் காரணம் புனித யோசேப்புக்கு இயேசுவுடன் இருந்த நெருக்கமே என்பதில் ஐயமேதுமில்லை. புனித யோசேப்பு இயேசுவின் வளர்ப்புத் தந்தை, கன்னிமரியின் கணவர், திருஅவை முழுவதற்கும் பாதுகாவலர், கற்புக்குப் பாதுகாவலர், தொழிளாளருக்குப் பாதுகாவலர், நல்ல படிப்புக்குப் பாதுகாவலர், நல்ல இறப்புக்கும் பாதுகாவலர்.

புனித யோசேப்பை மீண்டும் புதிதாக அறிவதற்கும், அந்த அறிவை ஆழப்படுத்தவும், அவரது பண்புகளையும் போக்குகளையும் அறிந்து தெளிந்து நமதாக்கி வாழவும், வல்லமை நிறைந்த அவரது பரிந்துரையினால் இறை ஆசிரையும் அருளையும் பெற்று வாழ்வை வளமாக்கி இயேசுவுடனான நமது உறவில் நெருக்கமாகிடவும் துணையாக "இறையியல் கோலங்கள்" இவ்விதழ் புனித யோசேப் புக்கு அர்ப்பணமாகின்றது. இன்றைய மனித வாழ்வில் மனித பண்புகளும் விழுமியங்களும் அருகி, சமுதாயத்தில் தீமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருகியுள்ள நிலையில், இவ்விதழின் ஆக்கங்கள் புனித யோசேப்புக்கு நெருக்கமாக எங்களைக் கொணர்ந்து, மனித வாழ்வை மேம்படுத்தி, தீமைகளைக் களைந்து, உறவில் இறைவனையும் அயலவர்களையும் பண்புடனும் அன்புடனும் நெருங்கி வாழ உதவிபுரியும் என நம்பகின்றேன்.

புனித தோமஸ் அக்குவினாசின் இறை அனுபவத்தில், "எல்லா வேளைகளிலும், எல்லாத் தேவைகளிலும், எல்லா நல்ல முயற்சிகளிலும் நமக்கு உதவி செய்யக்கூடிய வல்லமை புனித யோசேப்பிடம் இருக்கின்றது."

நட்புடன்,

அருட்தந்தை கலாநிதி த. ஜெறிபெல் கிருபாகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்புத் திட்டத்தில் புனித யோசேப்பு

அருட்தந்தை அ. துசியந்தன்
புனித பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்

## அறிமுகம்

"யோசேப்பே, தாவீதின் மகனே, உம் மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான். அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்." (மத் 1:20-21)

இறைவன் ஆதிப் பெற்றோருக்கு அளித்த மீட்பின் வாக்குறுதியை நிறைவேற்ற அதாவது தம் மீட்புத் திட்டத்தைச் செயற்ப்படுத்த தொடங்கியபோது தாம் மனுவுருவாக ஓர் இனத்தையே முதலில் தெரிவுசெய்தார். அந்த இனத்தின் தலைவராக ஆபிரகாம் இருக்கின்றார். தாவீது அரசன் அந்த வம்சத்தில் வருகின்றார். அந்த இனத்தின் அரச வம்சத்தில் இறைவன் மனுவாக உருவாகத் திட்டமிடுகிறார். அந்த வம்சத்தின் ஒரு முக்கிய நேரடியான மனிதராக தன் திருமகனின் வளர்ப்புத் தந்தையாக புனித யோசேப்பை இறைவன் தீர்மானம் செய்கின்றார்.

மீட்புத் திட்டதின் வரலாறு முழுவதும் இழையோடிக் கிடக்கின்ற இறையியல் நிதர்சனம் என்னவென்றால், மனிதரின் பலவீனங்களை இறைவன் தன் சார்பாக தன் ஆற்றலைக் கொண்டு பலப்படுத்தி, வல்லமையுடன் வழி நடத்தினார் என்பதாகும். அந்தவகையில், நம் ஆண்டவர் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய புனித யோசேப்பு எவ்விதம் இறைவனின் மீட்புத் திட்டத்தில் பங்கெடுத்தார் அல்லது பயன்படுத்தப்பட்டார் என்று சுருக்கமாக நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித யோசேப்பின் அழைப்பும் விசுவாசமுள்ள கீழ்ப்படிவும்

திருவிவிலியத்தின் நான்கு நற்செய்திகளில் மத்தேயு, லூக்கா இருவருமே புனித யோசேப்பின் அழைப்பையும் பணியையும் இயேசுவின் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளூடாகக் குறிப்பிடுகின்றனர். மாற்கு இவர் ஒரு தச்சன் என்பதை வெளிப்படுத்துகின்றார் (மாற்கு 6:3-4). யோவான், இயேசு நாசரேத்தூர் யோசேப்பின் மகன் என்பதை உறுதிப்படுத்துகின்றார் (யோவா 1:45). திருவிவிலியத்தில் யோசேப்பு ஒரு வார்த்தையும் பேசாத, அமைதியான மனிதராகக் காட்டப்பட்டாலும், அவர் ஆழமான விசுவாசமும், நீதியும், நேர்மையும் உள்ள ஒருவராகக் காட்டப்படுகின்றார். இதனையே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் "ஆர்ப்பாட்டம் இன்றி அமைதியாக, மீட்புத் திட்டத்தில் யாருடனும் ஒப்பீடு செய்ய முடியாத அளவுக்கு புனித யோசேப்பு தன்னை ஈடுபடுத்தினார்" என்று 'ஒரு தந்தையின் இதயத்தோடு' என்ற தமது திருத்தூது மடலில் குறிப்பிடுகின்றார்.

மீட்புத் திட்டத்திலே பங்காற்றிய பல குடும்பங்களை திருவிவிலியத்திலே காண்கின்றோம். மீட்பு வரலாறும் குடும்பமும் பிரிக்க முடியாதவையாக இருக்கின்றன. ஆனாலும் ஒரு குடும்பத்தின் கீழ்ப்படியாமையினால் வந்த அழிவையும் பாவத்தையுமே கடவுள் இன்னுமொரு குடும்பதின் மூலமாக மீட்பாகவும் ஆசீர்வாதமாகவும் மாற்றுகின்றார். புனித யோசேப்பு தான் கண்ட நான்கு கனவுகளூடாகவும் (மத் 1:20, 2:13, 2:19, 2:22) இறைவனின் திட்டத்தை உணர்ந்து கீழ்ப்படிவுடன் ஏற்றுக்கொள்கின்றார்.

இங்கு முதற்குடும்பத்தின் தந்தை ஆதாமுக்கும் திருக்குடும்பத்தின் தந்தை புனித யோசேப்புக்கும் இடையில் பாரிய வித்தியாசத்தைக் காணமுடிகின்றது. ஆதாமும் புனித யோசேப்பும் இறைவன் தம் திட்டத்தை வெளிப்படுத்தும் போது அமைதி காத்தார்கள். ஆனால், ஆதாமின் அமைதிக்கும் புனித யோசேப்பின் அமைதிக்கும் அதிகமான, ஆழமான வேறுபாட்டைக் கண்டுணரலாம். ஆதாமின் அமைதிக்குள் அவநம்பிக்கை இருந்தது, அலகையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைப்படி தன்னால் கடவுளாக முடியும் என்ற ஆசை இருந்தது. தன் பிழையை ஏற்றுக்கொள்ளாது மற்றவர்மீது பழிசுமத்தும் தன்மை இருந்தது. ஆனால் புனித யோசேப்பின் அமைதிக்குள் விசுவாசம் இருந்தது. கடவுளால் எதுவும் ஆகும் என்ற இறைநம்பிக்கை இருந்தது. தன்னால் மரியாளுக்கு எதுவும் ஆகிவிடக் கூடாது என்ற மனிதநேயம் கலந்த இரக்கம் இருந்தது. திருத்தந்தை தன் திருத்தூது மடலில் குறிப்பிடுவது போல் மறைவான நிழலான தனது செயற்பாடுகளால் அன்னை மரியாவோடு இணைந்து மீட்புத்திட்டம் முழுவதிலும் புனித யோசேப்பு பங்கெடுத்தார்.

திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுலுடைய 'மீட்பின் காவலன்' என்ற அப்போஸ்தலிக்க சுற்றுமடலில், கடவுள் தமது அன்பை மனுக்குலதிற்கு வெளிப்படுத்த வார்த்தை என்னும் கொடையைக் கொடுத்தபோது, அது அன்னை மரியாளினதும் புனித யோசேப்பினதும் சுதந்திரமான பரஸ்பர அன்பைப் பகிர்ந்து கொண்டதன் வாயிலாகவே வெளிப்படுத்தப்பட்டது என்றும், மீட்பு வரலாற்றின் உச்சநிலை இதுவென்றும் குறிப்பிடுகின்றார். இன்னுமாக, மீட்பு மறைநிகழ்வுகளின் தொடக்கம் புனித யோசேப்பின் நம்பிக்கைக்குரிய கரங்களில் ஒப்படைக்கப்பட்டது என்று புனித யோசேப்பு அன்னை மரியாளின் கணவர் என்ற பெருவிழாவின் சபை மன்றாட்டில் செபிக்கின்றோம்.

## திட்டத்தை வெளிப்படுத்திய வெறுமைகள்

அழகான இல்லற வாழ்வை எதிரபார்த்த இளைஞன் யோசேப்புக்குக் கிடைத்தது ஏமாற்றம். கூடி வாழ முன்பே மனைவி கற்பவதி என்றால் எந்த கணவன் தான் தாங்கிக் கொள்வான், ஏற்றுக் கொள்வான். ஆனால் இது இறை திட்டம் என்றதும் பணிவோடும் மகிழ்வோடும் ஏற்றுக் கொண்டார். மரியாவின் வயிற்றில் பிறப்பவர் உலகின் அரசர் என்றும் உன்னத கடவுளின் மகன் என்றும் உரைக்கப்பட்ட பொழுதும், அவர் பிறக்க இடமின்றி அலைந்து, ஈற்றில் மாட்டுத் தொழுவத்தில் பிறக்க நேர்ந்த பொழுதும் சற்றும் தளரா மனத்துடனும் மகிழ்வுடனும் அதனைத் தாங்கிக் கொண்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித யோசேப்பு. கடவுளின் மகனுக்கே பாதுகாப்பின்றி, ஏரோது அரசன் கொல்லத் தேடிய பொழுது எகிப்திற்கு தப்பியோடப் பணிக்கப்பட்டபோதும், எதிர்க் கேள்வியின்றி எழுந்து சென்றார் புனித யோசேப்பு.

இயேசுவைக் காணிக்கை கொடுக்கும்போது தன் மகன் தனக்குச் சொந்தமானவன் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டபோதும், ஜெருசலேம் தேவாலயத்தில் இயேசு காணாமல் போனபோது தேடிய மூன்று நாட்களிலும், இயேசுவைக் கண்ட பொழுது மகிழ்ச்சிக்குப் பதிலாக அவரின் பதிலால் அனுபவித்த வெறுமைக்கும் ஏமாற்றங்களுக்குள்ளும் புனித யோசேப்பு இறைவனின் திட்டம் எல்லாவற்றையும் தெட்டத் தெளிவாகப் புரிந்து கொண்டார். தன் இளமையை, இல்லற வாழ்வை, தன் ஆயுளையுமே இறுதிவரை இறைவனின் திட்டத்திற்காய் அர்ப்பணித்தார் புனித யோசேப்பு.

## பெயரும், பொருளும், செயலும்

நற்செய்திகளில் ஒட்டுமொத்தமாக பதின் மூன்று இடங்களில் புனித யோசேப்பு பற்றி குறிப்பிடப்படுகின்றன. ஆண்டவர் இயேசு தாவீது அரச வம்சத்திலும் நாசரேத்திலும் பிறப்பாரென்ற மறைநூல் வாக்கை நிறைவு செய்யவும், இன்னும் இயேசு யூத சட்டங்கள் சம்பிரதாயங்களுக்கு மதிப்பளித்து, கட்டுப்பட்ட மனிதராகப் பிறந்தார் என்பதையும் காட்டுவதோடு, குழந்தைப் பருவ நிகழ்வுகளை விளக்குபவையாகவும் இவ்வார்த்தைகள் காணப்படுகின்றன. எனினும் இங்கு புனித யோசேப்பின் பணி காத்திரமானதாகவும், இறைவன் அவரை நம்பி தன் திருமகனையே ஒப்படைக்கும் அளவுக்கு அவர் இறைவனின் திட்டத்திற்கு மிகவும் பிரமாணிக்கமுள்ள ஒருவராகச் செயற்பட்ட நிகழ்வுகளும் விபரிக்கப்படுகின்றன.

வீரமாமுனிவர் எழுதிய "தேம்பாவணி" எனும் நூலில் புனித யோசேப்பே கதாநாயகனாக் காணப்படுகின்றார். இங்கும் இவர் இறைவனின் மீட்புத் திட்டத்தின் மறையுண்மைகளைத் தேர்ந்து தெளிந்து அதை நிறைவேற்ற துணிவுடன் செயற்பட்ட ஒரு செயல் வீரனாகச் சித்தரிக்கப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபை பாரம்பரியங்களின் படி புனித யோசேப்பின் வாழ்வையும் பணிகளையும் பற்றி பல கதைகள் கூறப்படுகின்றன. புனித பௌ்னாந்து இவருடைய பெயரின் பொருத்தப்பாட்டை அழகாகக் குறிப்பிடுகிறார். அவரின் கூற்றுப்படி, "யோசேப்பு" என்ற எபிரேயச் சொல்லுக்கு அவர் வளர்கிறார் என்ற அர்த்தம் உண்டு. மனுக்குலத்திற்கு மீட்பும் ஆசியும் அவர் வழியாயக் கிடைத்தது. இறைவன் சிறந்த ஒரு கருவியாக அவரைப் பயன்படுத்தினார். அவர் பெயரிற்கு ஏற்ப மனுக்குலம் அவர் வழியாக வளர்ந்தது. மனுக் குலத்தை மீட்டெடுத்த மீட்பர் அவர் கரங்களில் வளர்ந்தார். பாவத்தில் வீழ்ந்து கிடந்த மனுக்குலம் மீட்பின் பாதையில் வளரத் தொடங்கியது. ஆகவே, புனித யோசேப்பினால் மீட்பரும் மனுக்குலத்தின் மீட்பும் வளர்ந்ததினால் அவர் 'வளனார்' என அழைக்கப்படுகின்றார்.

புனித யோசேப்பு தாம் எதிர்கொண்ட பல்வேறு நெருக்கடிகள், சோதனைகள், ஆபத்துக்கள் மத்தியிலும் கூட இறைவனின் திட்டத்தில் எதுவித அவநம்பிக்கையும் அற்றவராக உறுதிப்பாட்டுடன் இறைவழிநடத்தலில் தன்னை முற்றிலுமாகக் கையளித்து, மீட்புத்திட்டத்தில் தனது பெயரைப் பொறித்தார். இதனையே திருத்தந்தை 13வது லியோ தனது "புனித யோசேப்பின் பக்தி" என்ற திருத்தூது திருமடலில் புனித யோசேப்பை நம்பி அவரது பாதுகாப்பில் இறைவன் தமது விலைமதிப்பற்ற உயர்ந்த பொக்கிஷமாகிய தன் திருமகனை ஒப்படைத்தார் என்று குறிப்பிடுகின்றார்.

மேலும், இயேசுவை, இவர் தச்சனின் மகன் என்று மக்கள் குறிப்பிடுகின்றனர். இங்கு பயன்படுத்தப்பட்ட சொல்லாகிய தச்சன் என்ற பதத்திற்கு எபிரேய மொழியில் வெறுமனே மரவேலைகள் செய்பவரைக் குறிப்பிடவில்லை. அத்தோடு, உலோகம், மண், கல் போன்றவற்றிலும் சிறப்ப வேலைப்பாடுகளைச் செய்யும் ஒரு கைவினைஞரையே குறிப்பிடுகின்றது. அந்தவகையில் புனித யோசேப்பும் ஒரு தச்சனாக மாத்திரமன்றி ஒரு கைவினைஞராகவும் செயற்பட்டிருக்கின்றார். இதனை, இயேசுவின் பிற்கால பணிகள் போதனைகளிலிருந்தும் அவரது வாழ்விலிருந்தும் உணர்ந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசேப்பு எனும் பெயரை நாம் பழைய ஏற்பாட்டிலும் கேள்விப்படுகின்றோம். யாக்கோப்பின் பாசத்திற்குரிய கடைசி மகனும், சகோதரர்களின் வெறுப்புக்குள்ளாகி எகிப்தியருக்கு விற்கப்பட்டவருமான யோசேப்பு. இவருக்கும் புனித யோசேப்புக்கு மிடையில் பல ஒற்றுமைகளை நாம் அவதானிக்கலாம். இருவரினதும் தந்தையின் பெயர் யாக்கோபு ஆகும். இருவரும் கனவுகள் மூலம் இறைவனின் மீட்புத்திட்டத்தை உணர்ந்து கொள்கின்றனர், எகிப்திற்கு செல்லவேண்டிய கட்டாயத்திற்கு உட்படுகின்றனர். பலவிதமான நெருக்கடிகளை, முரண்பாடுகளைச் சந்தித்தாலும் இருவரும் நேர்மை யிலும், நீதியிலும், இறைபிரமாணிக்கத்திலும் தவறாதவர்களாக வாழ்ந்தார்கள். யோசேப்பு ஆளுநரின் கருவூலங்களுக்குப் பொறுப் பாகி, மக்கள் பசியாற்றி இறைவன் தேர்ந்துகொண்ட இனத்தைப் பாதுகாத்தார். புனித யோசேப்பு இறைமகனைப் பொறுப்பெடுத்து அதன் மூலம் முழு உலகையுமே மீட்டெடுக்கும் பணியில் பங்காளி யாகின்றார். யாக்கோபு யோசேப்பின் மடியில் உயிர்துறக்கின்றார். புனித யோசேப்பு இயேசுவின் கரங்களில் மரிக்கின்றார்.

## பாதுகாவலர்

மீட்புத் திட்டத்தில் புனித யோசேப்பு ஆற்றிய பிரமாணிக் கமுள்ள அளப்பரிய பணியின் காரணமாகவும் அவரின் சிறப்பான பண்புகளின் காரணமாகவும் அவர், பலரின் மற்றும் பலவற்றின் பாதுகாவலராகக் கொண்டாடப்படுகின்றார்.

தூய யோசேப்பு கன்னிகளின், மாணவர்களின், தொழிலாளர் களின், மரணத் தருவாயில் உள்ளோரின், தந்தையர்களின், பொறியி யலாளர்களின், புதுத் தம்பதிகளின் பாதுகாவலராகவும், கல்லூரிகள், தொழிற்சலைகள், நல் மரணத்தின், சமூக நீதியின், திருஅவையின் பாதுகாவலராகவும் திகழ்கின்றார். இவற்றுக்கு மேலாக இவர் மீட்பரின் காவலர் என்றும் அன்னை மரியாளின் கணவர் என்றும் திருஅவை யில் பக்தியோடு நினைவு கூர்ந்து விழாக் கொண்டாடப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவாக

புனித யோசேப்பின் யூபிலி ஆண்டானது நாம் இறைவனின் திட்டத்தை எவ்வாறு நோக்குகின்றோம் என்று ஆராயவும், அத்திட்டத்தை நல் மனதோடும், விசுவாசத்தோடும் ஏற்றுக்கொண்டு இறைஅரசை நோக்கி முன்னேறிச் செல்கின்றோமா என விழிப்படையவும் வழங்கப்பட்ட ஒரு வாய்ப்பாகும்.

ஒவ்வொரு மனிதரிடமும் பலவீனங்கள் உள்ளன. அவற்றை நாம் முழுமையாக இறைவனிடம் கொடுக்கும் போதும், அவர் சித்தமே நிறைவேறட்டும் என்று கீழ்ப்படிவோடு சரணடையும் போதும் இறைவன் எல்லாவற்றையும் தம் விருப்பப்படி நிறைவேற்றுவார் என்கின்ற நம்பிக்கையை நாம் வளர்த்துக் கொள்வோம்.

நாம் இன்று கொரோணா தொற்றின் ஆதிக்கத்துக்குள்ளே அடக்கப்பட்டிருக்கின்றோம். நம்மைச் சூழ நடப்பவை பற்றி எதுவும் தெரியாமல் குழப்பங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்நிலையில் நாம் புனித யோசேப்பைப் போன்று அமைதியுடன் இறைவனின் திட்டடத்திற்கு நம்மைக் கையளிப்போம்.

புனித யோசேப்பு முன்னுதாரணமாக எமக்கு வாழ்ந்து காட்டியுள்ளார். மீட்பு வரலாற்றில் தன் பணியைச் சிறப்புற நிறை வேற்றியுள்ளார். நாமும் அன்றாட வாழ்வின் சவால்கள், ஏமாற்றங்கள், தோல்விகளை இறைவல்லமையால் எதிர்கொண்டு இறைவனின் திட்டத்தில் திடமுடன் நடப்போம். புனித யோசேப்பு எமக்காய் என்றும் பரிந்துரைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபையின் பாதுகாவலர்
# புனித யோசேப்பும்
# அவர் காட்டும் வாழ்வியல் பண்புகளும்

*அருட்சகோதரன் றோ. அலெக்சன்*
*$2^{ம்}$ வருட இறையியல்*
*புனித பிரான்சிஸ்கு சவேரியார்*
*குருத்துவக் கல்லூரி*
*கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்*

புனிதர் யோசேப்பு அன்னை மரியாளின் அன்புக் கணவராகவும், ஆண்டவர் இயேசுவின் பாசம் நிறைந்த தந்தையாகவும் விளங்கியதோடு மட்டுமன்றி திருக்குடும்பத்தின் தலைவனாக திகழ்ந்து எமது சமுதாயத்திலே காணப்படுகின்ற குடும்பங்களுக்கு முன்மாதிரிகையான ஒரு தந்தையாக திகழ்கின்றார். மேலும் நமது புனிதர் இன்று திருச்சபையின் பாதுகாவலராக மட்டுமன்றி எமது வாழ்வின் எல்லாச் சூழ்நிலைகளிலும் துணைவராக இருக்கின்றார் விசேட விதமாக எமது அவசர வேளைகளில் விரைந்து வந்து அடைக்கலம் தந்து எமது வேண்டுதல்களை நிறைவேற்றுகின்ற புனிதராக இவர் துலங்குவதைக் காணலாம். இவர் தொழிலாளர்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரிகையான தொழிலாளியாக துலங்கி எமது தொழில்களை ஆசீர்வதிக்கும் புனிதராகவும், தொழிலாளர்களின் பாதுகாவலராகவும் காணப்படுகின்றார்.

புனித யோசேப்பின் வாழ்வியல் பக்கங்கள் திருவிவிலியத்தில் பெரிதளவாக குறிப்பிடப்படவில்லை எனினும், கடுகு விதை போல சிதறிக்கிடக்கின்ற திருவிவிலிய குறிப்புக்களை வாசித்து ஆழமாக சிந்திக்கின்ற போது அவர் வாழ்வில் காணப்பட்ட பண்புகளை கண்டுணர முடியும். எனவே புனிதர் யோசேப்பின் வாழ்வில் பின்னிப் பிணைந்து காணப்படுகின்ற பண்புகளை அவருடைய ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்ட இவ்வாண்டிலே நாம் சிறப்பாக சிந்தித்து அதனூடாக புனிதர் காட்டும் வழியை கண்டுகொள்வது சாலச் சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நாம் திருச்சபையின் பாதுகாவலர் என புனித யோசேப்பை அழைப்பதற்கு காரணம் என்ன? கிறிஸ்து இவ்வுலகில் தனது பணியை தொடர்ந்து ஆற்ற புனித பேதுருவின் தலைமையில் திருச்சபையை நிறுவினார் என்பது நமக்குத் தெரியும். இத் திருஅவையானது கிறிஸ்துவை பிரதிபலிக்கின்றது என்றும் அது கிறிஸ்துவாக இருக்கின்றது என்றும் நாம் அறிந்துள்ளோம். எனவே கிறிஸ்து என்றால் அது முழு உலகத் திருஅவையையும் குறித்து நிற்கின்றது. இவ்வாறாக புனித யோசேப்பு திருஅவையாகிய கிறிஸ் துவை சிறுவயது முதல் எல்லா ஆபத்துக்களிலுமிருந்து பாதுகாத்து வழிநடத்தியதன் மூலமாக அவர் கிறிஸ்துவாகிய திருஅவையை இன்றும் என்றும் பாதுகாக்கிறார் என்ற ஆழமான விசுவாசத்தின் பிரகாரம் புனித யோசேப்பு திருஅவையின் பாதுகாவலர் என திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதரால் பிரகடனப்படுதத்ப்பட்டார். அதுமட்டுமல்லாமல் திருஅவையின் பாதுகாவலர் என பிரகடனப் படுத்தப்பட்ட நூற்று ஐம்பதாவது ஆண்டின் நிறைவை அடைந்திருக் கின்ற இவ்வாண்டை தற்போதைய திருத்தந்தை புனித பிரான்சிஸ் புனித யோசேப்பின் ஆண்டாக பிரகடனப்படுத்தியது மீண்டும் திரு அவையின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தி நிற்கின்றது.

## நேர்மை

"நேர்மை" ஒரு மனிதரிடத்தில் சாதரணமாகக் காணப்பட வேண்டிய நற்பண்பாகும். இப் பண்பானது தனக்கும், பிறருக்கும், கடவுளுக்கும் உண்மையாக வாழ்தலை குறித்து நிற்கின்றது. நேர்மை எனும் சொல்லுக்கு வரைவிலக்கணத்தை தனது வாழ்வால் வரையறுத்துக்கொடுத்தவர் நமது புனிதர் யோசேப்பு.

இந்த 21ம் நூற்றாண்டு நேர்மை என்னும் பண்பிற்கு சவாலான ஒரு காலமாகும். ஏனெனில் நேர்மையாக வாழ்ந்தால் எதைப் பெற்றுக் கொள்ளப்போகின்றோம் என்ற எதிர்மறையான எண்ணத்தால் எதிர்பார்ப்பு நிறைந்த இவ்வுலகில் நேர்மைக்கு இடம் இல்லாமல் போயிற்று. பார்த்து எழுதி வாங்கும் நூறு புள்ளிகளை விட நேர்மையாக பரீட்சை எழுதி வாங்கும் ஒரு புள்ளி மேலானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையாக இருத்தல் அல்லது நேர்மையாக வாழ்தல் என்பது இலகுவான செயலும் அல்ல சுலபமான காரியமும் அல்ல. இங்கு நேர்மையாக வாழ்பவர்கள் பலர் வீழ்த்தப்படுகின்றார்கள், நொறுக்கப் படுகின்றார்கள், ஏமாற்றப்படுகின்றார்கள் மற்றும் அவமானப்படுத்தப் படுகின்றார்கள். இத்தகைய அவமானங்களால் நாம் தாழ்த்தப்பட்டா லும் கடவுள் எங்களை மற்றவர்கள் முன்னிலையில் நின்று எம்மை உயர்த்துவார். எனவே எங்களுடைய வாழ்க்கையில் நேர்மை என்னும் பண்பை சிறிய காரியங்களில் தொடங்கினால் இறைவனின் அளப்பெரிய அன்பை கண்டுகொண்டு சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

## இறையச்சம்

"இறையச்சமே ஞானத்தின் தொடக்கம்" என்று திருவிவிலி யத்தில் நாம் வாசித்ததுண்டு. இன்றைய உலகில் எண்ணிலடங்கா அறிவாளிகள், படிப்பாளிகள் பல பட்டத்தோடு வலம் வருகின்றார்கள். ஆனால் இவர்கள் அனைவரிடமும் ஞானம் இருக்கின்றதா என்பது புரியாத புதிர்தான். ஏனெனில் ஞானத்தை அடைவதற்கான திறவு கோல் இந்த இறையச்சம் எனும் பண்பிலே தங்கியுள்ளதைக் காணலாம். அப்படிப்பட்ட பண்பு இன்று எம் மத்தியில் கடுகளவேனும் இல்லையென்றே கூறலாம். ஆனால் புனித யோசேப்பு இறையச்சம் என்னும் பண்பை தன்னில் உணர்ந்தவராய் சிறப்பாக அதற்காக தன்னை அர்ப்பணித்ததை அவருடைய வாழ்வினூடாக காணலாம்.

இந்த நூற்றாண்டிலே வாழுகின்றவர்கள் இறையச்சம் என்ற பண்பு அறவே அற்றவர்களாக வாழ்வதை நாம் கண்டுகொள்ளலாம். இறையச்சத்தோடு ஒருவன் வாழ்கின்றபோது அவன் தீமைகள் செய்வதிலிருந்தும், பாவங்கள் புரிவதிலிருந்தும் விடுதலை பெறுகின் றான். ஏனெனில் அவன் கடவுளுக்கு முழுமையாக தன்னை ஒப்படைக்கின்றான். அதுமட்டுமல்லாமல் இறையச்சத்தோடு வாழ் பவர்களுடைய மனதில்தான் அமைதியும் சமாதானமும் குடி கொள் கிறது மகிழ்ச்சியும் நிலைத்து நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமைத்துவம்

அன்பான கணவர், பாசமிகு தந்தை என்ற இரண்டு நபரினூடாக நமது புனிதரின் தலைமைத்துவப் பண்பானது வெளிப்படுகின்றது. இன்றைய தலைமைத்துவங்களுக்கு சவாலாகவும் முன்னுதாரணமாகவும் திகழ்கின்ற புனித யோசேப்பின் தலைமைத்துவத்தினூடாக கோடிட்டுக் காட்டப்படுவது என்னவென்றால் ஒருவர் தன்னை முழுமையாக பிறர்க்கு அர்ப்பணித்து, உண்மையான அர்ப்பணிப்போடு சேவையாற்றுகின்ற போதே இப் பண்பு ஒருவரில் துலங்கும் எனும் ஆழமான உண்மையை வெளிப்படுத்தி நிற்கின்றார்.

ஒருவர் பிறக்கும் பொழுது தலைமைத்துவம் என்ற பண்பு அவனோடு சேர்ந்து பிறப்பதில்லை. மாறாக வளர்கின்ற சூழலிலேயே ஒருவன் அப்பண்பால் வளர்த்தெடுக்கப்படுகின்றான். இவ்வாறாக அவன் எதிர்காலத்தில் எதுவாக இருக்கப்போகிறான் என்பதை சூழலே தீர்மானிக்கின்றது. ஒரு வளரும் குழந்தை, குடும்பத்தில் தனது தந்தை, தாய் ஊடாகவும், பாடசாலை செல்கின்ற போது ஆசிரியர்கள் ஊடாகவும், மேலும் தான் காண்கின்ற மனிதர்கள் மூலமாக தன்னை அறியாமலே கற்றுக்கொள்கிறது. இன்றைய தலைமைத்துவங்களுக்கு முன்னுதாரணமாக திகழ்கின்ற சில தலைமைத்துவங்கள் மத்தியில் திருத்தந்தை பிரான்சிஸ்ஸினுடைய தலைமைத்துவம் புனித யோசேப்பின் தலைமைத்துவ பண்புகளோடு ஒத்துக்காணப்படுகின்றது. ஆகவே எதிர்காலத் தலைமைத்துவம் இன்றைய எமது வாழ்க்கை முறையிலே தான் தங்கியுள்ளது என்ற நிஜத்தை எமது வாழ்வாக்க முயற்சி எடுப்போம்.

## பொறுப்புள்ள தந்தை

குடும்பத்தின் ஆணிவேராகவும், அச்சாணியாகவும் இருப்பவர் தான் தந்தை. எல்லா விதமான வலிகளை சுமந்து, கஸ்டங்களை தாங்கி, அவமானங்களை ஏற்று, நிந்தைகளுக்குள்ளாகி சிறப்பாக இவை எல்லாவற்றையும் பகிரமுடியாமல் தன்னிலே புதைத்து வைத்துக்கொண்டு நம்பிக்கையை மட்டுமே கண்முன் கொண்டு காலத்தையும், நேரத்தையும் பாராமல் தன் குடும்பத்தின் மகிழ்ச்சிக்காக அயராது உழைப்பவரே உண்மையான தந்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையை பெற்றெடுப்பது மட்டுமல்ல ஒரு தந்தைக்குரிய பணி. மாறாக யார் யாரெல்லாம் தந்தைக்குரிய மனப்பக்குவத்தைக் கொண்டு பிள்ளைகளுக்குரிய கடமைகளை நேர்த்தியாக நிறைவேற்றுகின்றாரோ அவர்கள் தான் உண்மையான தந்தையர்கள் இன்று குருக்களும், துறவிகளும் இத்தகைய பணியில் தம்மை அர்ப்பணித்து புனித யோசேப்பின் நிலையில் இருந்து கொண்டு பங்கு மட்டத்திலே பணியாற்றுகின்றார்கள். சமுதாயத்தில் இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் புனித யோசேப்பு விடுக்கும் அழைப்பு என்னவென்றால் எங்கே சிறுவர்கள் துன்புறுத்தப்படுகிறார்களோ, எங்கே சிறுவர்கள் உரிமை மீறப்படுகின்றதோ, எங்கே சிறுவர்கள் அன்பையும், இரக்கத்தையும் சுவைக்க முடியாமல் போகின்றார்களோ அங்கே அவர்களுக்கு நானும் நீங்களும் ஒரு பொறுப்புள்ள தந்தைகளாக மாறி புனித யோசேப்பின் வாழ்வை எமது வாழ்வில் பிரதிபலிக்க அழைக்கப்படுகின்றோம்.

# தந்தையின் இதயத்துடன்

அருட்தந்தை மி. ஜெகன் கூஞ்ஞே, அ.ம.தி.
விரிவுரையாளர்
புனித பிரான்சிஸ்கு சவேரியார்
குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

## முன்னுரை

புனித யோசேப்பு, தமிழ் கிறிஸ்தவ உலகில் வளனார் என அறியப்படும் இந்த ஒப்பற்ற புனிதர், ஒரு வரலாறு. அமைதியான மற்றும் மென்மையான புனிதராக இருந்தாலும், இவருடைய தாக்கங்கள் திருஅவையின் உலகில் பல ஆயிரம் ஆண்டுகளைக் கடந்து வாழ்கிறது. எபிரேயச் சொல்லும் கிரேக்கச் சொல்லும; (éåÉñÅó Iωσηφ) வளனாரை ஒரே விதமான உச்சரிப்பிலே அழைக்கிறது. யோசேப் என்ற இந்த எபிரேயச் சொல்லுக்கு வளர்ப்பவர், பாதுகாப்பவர், விவசாயி என்ற பொருட்களும் உள்ளன.

பழைய ஏற்பாட்டில் எட்டு நபர்கள் யோசேப்பு என்ற பெயரில் அழைக்கப்பட்டிருப்பது, இந்த யோசேப்பு என்ற பெயர், எபிரேய உலகத்தில் பிரசித்தி பெற்ற பெயராக இருந்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது. ராக்கேலின் மூத்த மகனும், யாக்கோபுவின் பதினோராவது மகனும்தான், பழைய ஏற்பாட்டில் மிகவும் பிரசித்தி பெற்ற யோசேப்பு, இவர்தான் எகிப்தின் ஆளுனராக மாறி, எகிப்தியரையும், இஸ்ராயேலரையும் கொடிய பஞ்சத்திநின்று காப்பாற்றியவர். இவர் புதிய எற்பாட்டில், இயேசுவிற்கும், அவரின் வளர்ப்புத் தந்தை வளனாருக்கும் முன்னடையாளமாக விளங்குகின்றார்.

எண்ணிக்கை நூல் 13,7ல் இகாலின் தகப்பனும், யோசுவாவின் பன்னிரண்டு உளவாளிகளில் ஒருவரும் யோசேப்பு என அழைக்கப்படுகிறார். 1குறிப்பேடு 25,2 மற்றும் 9இல், தாவீதின் காலத்து ஆசாபின் புதல்வர் ஒருவர், அவருடைய இசைக்குழுவில் யோசேப்பு என்ற பெயரில் வாழ்ந்திருக்கிறார். எஸ்ரா 10,42 இல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றின பெண்களை மணந்து, அவர்களை எஸ்ராவின் தூண்டுதலால் விவாகரத்து செய்தவர்களுள் ஒருவர் யோசேப்பு என அறியப்படுகிறார். நெகேமியா 12,14இல் குருகுலத்தலைவர் ஒருவர் யோசேப்பு என அறியப்படுகிறார். யூதித்து 8,1இல், யூதித்தின் குலமுதுவர்களில் ஒருவரும் யோசேப்பு என அழைக்கப்படுகிறார். 1மக்கபேயர் 5,18 மற்றும் 55-62 இல் இதுமேயர் மற்றும் அமேரியருடைய போரில், யோசேப்பு என்ற போர் வீரர் ஒருவர் வாழ்ந்திருக்கிறார். இறுதியாக 2மக்கபேயர் 8,22 இல், யூதா மக்கபேயின் சகோதரர்களில் ஒருவரும் சில இடங்களில் யோசேப்பு என அழைக்கப்படுகிறார்.

இப்படியாக யோசேப்பு என்ற பெயர் வெறும் பெயரல்ல, மாறாக அது பல வரலாற்று மனிதர்களின் அடையாளம் என்பதைக் காட்டுகிறது. இந்த பழைய ஏற்பாட்டு மனிதர்களில், யாக்கோபு-ராக்கேல் தம்பதியினரின் மூத்த புதல்வர், யோசேப்பு மிக மிக முக்கியமானவராக ஒளிர்கிறார்.

இந்த வரிசையில், புதிய ஏற்பாட்டில் வருகின்ற யோசேப்பு, மரியாவின் கணவர், இயேசுவின் வளர்ப்புத் தந்தை, ஒரு நீதிமானாக காட்டப்படுகிறார். இவரைப்பற்றி நான்கு நற்செய்திகளும் வெளிப்படையாக அதிகமாக பேசவில்லை என்று ஒரு பக்கச்சார்பில் சொல்லாம். ஆனால் பல ஏற்றுக்கொள்ளப்படாத புதிய ஏற்பாட்டு நூல்கள் யோசேப்பை-வளனாரைப் பற்றி அதிகமாக பேசுகின்றன. இவையனைத்தும் பாரம்பரியங்களாக நம்பப்படுகின்றன. முதல் நற்செய்தி (*Protoevangelium - The Gospel of James*) அல்லது புனித சின்ன யாக்கோபு எழுதிய, இயேசுவின் குழந்தைப் பருவ நற்செய்தி என்ற நூல், (இது இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்க வேண்டும்), இந்த நற்செய்தி இயேசுவின் குழந்தைப் பருவத்தைப் பற்றி, அன்னை மரியாவின் கர்ப்பத்தில் இயேசு அற்புதமாக அவதரிப்பது, யோசேப்பிற்கும் மரியாவிற்குமான திருமணம், புனித தம்பதியினரின் எகிப்திய பயணம், இயேசுவின் பிறப்பு, அத்தோடு அதனை ஒட்டிய நிகழ்வுகள் போன்றவை பற்றி பல அதிசயங்களை உள்ளடக்கி காட்டப்படுகின்றன. கத்தோலிக்க திருஅவை இந்த புத்தகத்தை விவிலிய நூல்களில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாலும், இந்த புத்தகத்தின் தாக்கம், புனித வளனாரைப் பற்றிய பல தகவல்களை இன்றும் தந்து கொண்டுதான் இருக்கிறது.

இந்த புத்தகத்தின் இலக்கங்கள், 42,46,50,52,66 மற்றும் 84 போன்றவை புனித வளனாரைப் பற்றிய பாரம்பரிய நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன. இவையனைத்தையும் கத்தோலிக்க பாரம்பரியமும் நம்பிக்கையும் அப்படியே ஏற்றுக்கொள்ளாவிடினும், இவை புனித வளனாரைப் பற்றிய சித்திரங்கள், திருச்சுருபங்கள் மற்றும் சிற்பங்களில் பெரிய தாக்கத்தை தொடர்ந்தும் ஏற்படுத்துவதைக் காணலாம்.

*சாதாரணமாக புனித வளனாரைப்பற்றி முன்வைக்கப்படும் அதிசயமான ஏழு தகவல்கள்*

அ. வளனார் விவிலியத்தில்-புதிய ஏற்பாட்டில் பேசியதாக எந்த வசனமோ, உரையோ பதியப்படவில்லை

ஆ. பல புதிய ஏற்பாட்டு புத்தகங்களில், முக்கியமாக மாற்கு நற்செய்தியில் வளனாரின் பெயர்கூட சொல்லப்படவில்லை

இ. ஏனைய மூன்று நற்செய்திகளில் வளனார், திடிரென மறைந்து போகிறார், அவருக்கு என்ன நடந்ததென்று சொல்லப்படவில்லை

ஈ. இவர் மரியன்னையை திருமணம் செய்வதற்கு முன், ஏற்கனவே திருமணமாகி முதல் மனைவியை இழந்தவர் எனவும் சில பாரம்பரியங்கள் நம்புகின்றன

உ. வளனார் வணக்கம் 9ம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பித்திருக்க வேண்டும்.

ஊ. திருஅவையின் வழிபாட்டு நாட்காட்டியில் வளனாருக்கு இரண்டு திருநாட்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன (மார்ச் 19, மே 1)

எ. புனித வளனார் பல துறைகளில் பாதுகாவலராக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார் (உலக திருஅவை, நல் மரணம், பல பக்திச் சபைகள், பல துறவற சபைகள், தொழிலாளர், தந்தையர்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் கத்தோலிக்க திரு அவைக்கும் புனித வளனார் வணக்கத்திற்கும் மிகுந்த தொடர்பிருக்கின்றது. வளனாரைப் பற்றி இந்திய, ஈழ திரு அவைகளில் பல நாட்டுப்புற பாடல்கள், கதைகள், நாடகங்கள் இருந்தாலும், தேம்பாவணி எனும் இலக்கியம் அனைத்திலும் சிறந்து விளங்குகின்றது.

தேம்பாவணி (வாடாத மாலை அல்லது, தேன் போன்ற இனிய மாலை), புனித வளனாரின் வரலாற்றையும், சிறப்பையும் பற்றி இயற்றப்பட்ட முதற் பெரும் செய்யுள் வகை இலக்கிய நூல். இதனை 1726ம் ஆண்டில், இத்தாலிய நாட்டு இயேசு சபை மறைபரப்பாளரான அருட் தந்தை கொன்ஸ்சான்சோ யுசப்பே பெஸ்கி யே.ச (*Constanzo Giuseppe Beschi*) – வீரமாமுனிவர் இயற்றினார். இவர் 1710 ஆண்டில் தமிழகத்திற்கு வந்து பணியாற்றத் தொடங்கினார். பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்த அருட்சகோதரி சுகிர்த மரியா (*Maria de Jesús de Ágreda*), தான் மரியன்னையின் ஆணைப்படி எழுதிய இறைநகரம் (*Mystical City of God*) என்ற நூலை எழுதியதாக குறிப்பிடுகிறார், இந்த நூல் வளனாரைப் பற்றிய பல தகவல்களை தாங்கியுள்ளது. இந்த புத்தகத்தைதான் வீரமாமுனிவர் தன்னுடைய மூல புத்தகமாக பாவித்துள்ளார். யோசேப்பிற்கு 'வளன்' என்ற சொல்லையும் வீரமாமுனிவர்தான் அறிமுகம் செய்தார். இயேசுவை வளர்த்து பாதுகாத்தார் என்ற அர்த்தத்தில் வளன் என்ற சொல் அறிமுகம் செய்யப்படுகிறது. இந்த வளன் என்ற சொல் ஈழத்திரு அவையில் மிகவும் பிரசித்தி பெறுவதற்கு இதுதான் காரணம்.

150 ஆண்டுகளுக்கு முன்னர், திருத்தந்தை 9ம் பத்திநாதர் அவர்கள், புனித வளனாரை திரு அவையின் பாதுகாவலராக பிரகடனம் செய்தார். மார்கழி 8ம் திகதி, 1870 ஆம் ஆண்டு, திருச்சடங்கு களுக்கான பேராயம் *Quemadmodum Deus* எனும் வரைபை பிரகடனம் செய்தது. அந்த வரைபு, திருத்தந்தை 9ம் பத்திநாதர், புனித வளனாரை அகில உலக திருச்சபையின் பாதுகாவலராக பிரகடனம் செய்ததை அறிவித்தது. அத்தோடு வளனாரின் திருநாளான பங்குனி 19ம் நாளை கடன்திருநாளகவும் பிரகடனம் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி, குலமுதுவர் யாக்கோபுவின் புதல்வர் யோசேப்பு, எகிப்தையும், அக்கால உலகத்தையும் பஞ்சத்திலிருந்து காத்தாரோ அதேபோல, புதிய காலத்தில் இந்த யோசேப்பு - வளன், உலகத்தின் உண்மையான உணவும் சொத்துமான இயேசு ஆண்டவரை அனைத்து தீமைகளிலிருந்தும் பாதுகாத்தார். இயேசு ஆண்டவர் தன்னுடைய கடவுள் தன்மையிலும், அமல அன்னை, தன்னுடைய தூய்மையான சுபாவத்தாலும், யோசேப்பிற்கு மேற்பட்டவராக இருந்ததாலும், இவர்களை பாதுகாக்கும் உன்னதமான பொறுப்பை கடவுள் யோசேப்பிற்கு கொடுத்தார் என்பதையும் காட்டியது.

மேலும் குலமுதுவர்கள், அரசர்கள், நீதித்தலைவர்கள், இறைவாக்கினர்கள் எதிர்பார்த்திருந்தும் காணாத மெசியாவை, யோசேப்பு முகம்முகமாக பார்த்தார், தன்னுடைய கரங்களில் தூக்கி அரவணைத்தார். வானிலிருந்து வந்த உன்னத உணவாகிய இயேசுவாடு வாழப் பாக்கியம் பெற்றார். யோசேப்பு பெற்ற இந்த பாக்கியமான சந்தர்பங்கள், இவரை திருஅவையில் புனிதர்கள் மட்டில் உயர்ந்த இடத்திற்கு உயர்த்தியது. இதனால்தான் திரு அவை, புனித யோசேப்பை, அன்னை மரியாவிற்கு அடுத்தபடியாக உயர்த்தியிருக்கிறது என்று அறிமுகம் செய்தது. அத்தோடு அன்றைய நாட்களில் ஐரோப்பிய உலகமும், திருஅவையும் சந்தித்த பலவிதமான உள்நாட்டு போர்கள் மற்றும் கலகங்களிலிருந்து அனைவரையும் பாதுகாக்கக்கூடியவர் புனித யோசேப்பு ஒருவரே என்பதையும் கோடிட்டுக் காட்டியது.

திருத்தந்தை அவர்கள், தான் திருத்தூதர்களின் வழிமரபு என்பதாலும், முதலாவது கிறிஸ்தவரும், ஆண்டவரின் முதன்மையான சீடர் என்பதாலும், தன்னுடைய சொந்த தேவைக்காகவும், தன் திருஅவை அனைத்தின் தேவைக்காகவும், மீட்பரையே பாதுகாக்கும் வரம் பெற்றவரும், மரியன்னையின் உன்னதமான கணவருமான யோசேப்பின் கரங்களைப் பற்றிக்கொள்ள முயற்சி செய்கிறார் என்று அடையளாப்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தந்தையின் மடல்

APOSTOLIC LETTER, OF THE HOLY FATHER FRANCIS,

*PATRIS CORDE*

ON THE 150th ANNIVERSARY

OF THE PROCLAMATION OF SAINT JOSEPH

AS PATRON OF THE UNIVERSAL CHURCH

'பாட்ரிஸ் கோர்டே,' தந்தையின் இதயத்துடன் என்று இந்த திருத்தூது மடல் ஆரம்பமாகிறது. இந்த மடலில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனித வளனாரை தன்னுடைய முன்னோர் 9ம் பத்திநாதர் திருத்தந்தை அகிலஉலக திருஅவையின் பாதுகாவலராக பிரகடனப்படுத்தியதை நினைவுகூர்ந்து, இந்த ஆண்டை புனித வளனார் யூபிலி ஆண்டாக பிரகடனம் செய்கிறார். 150 ஆண்டுகளுக்கு முன்னர், உலகத்தையும் திருஅவையையும், போர் மேகங்களிலிருந்து பாதுகாத்தது போல, இந்த நாட்களில் திருஅவையும் உலகமும் சந்திக்கும் கொரோனா பெருந்தொற்று மற்றும் மரண நோயின் பிடியிலிருந்து பாதுகாக்க வேண்டி ஆசிக்கின்றார். நான்கு நற்செய்திகளும் யோசேப்பை பற்றி சில தகவல்களை கொடுத்தாலும், அதிகமாக பேசவில்லை என்பதை காட்டும் திருத்தந்தை அவர்கள், இருந்தாலும் புனித வளனாரின் முக்கியத்துவம் விவிலியத்தில் குறைக்கப்படவில்லை மாறாக ஆழப்படுத்தப்பட்டுள்ளன என்பதை காட்டுகிறார்.

நற்செய்திகள் காட்டும் உதாரணங்களான வளன் ஒரு சாதாரண தச்சன் (மத் 13,55), மரியாவின் கணவர் (மத் 1,18: லூக் 1,27), அவர் ஒரு நீதிமான் (மத் 1,19), யூத மற்றும் லேவிய சட்டங்களை மதித்தவர் (லூக் 2,22.27.39), கனவுகளில் ஆண்டவரை சந்தித்தவர் (மத் 1,20: 2,13.19.22), தன் குடும்பத்தை இக்கட்டான சூழ்நிலையில் தங்கவைக்க இடமில்லாமல் அலைந்தவர் (லூக் 2,7), மரியாவோடு சேர்ந்து இடையர்களின் வணக்கத்தைக் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர் (லூக் 2,8-20), ஞானிகளை வரவேற்றவர் (மத் 2,1-12), என்று காட்டி, வளனை இஸ்ராயேலர் மற்றும் புறவினத்தாரின் முன்னடையாளமாக காட்டுகிறார்.

வளனுக்கு சில விசேட சந்தர்ப்பங்களும் கொடுக்கப்பட்டன. வளன் கடவுளுக்கே பெயர் வைக்க பாக்கியம் பெற்றவர். ஆலயத்தின் முதியவர்களான அன்னா மற்றும் சிமியோனின் இறைவாக்குகளை அவர் கேட்டார் (லூக் 2,22-35), ஏரோதின் கொலைமுயற்சியிலிருந்து குழந்தையை அவர் பாதுகாத்தார் (மத் 2,13-18), நாசரேத்தின் பழைய ஏற்பாட்டு சாபத்தை மாற்றினார் (யோவேல் 7,52), அத்தோடு யூத சட்டங்களை இயேசுவிற்கு கற்பிக்க பாக்கியம் பெற்றவரும் அவர்தான் (லூக் 2,41-50) என எழுதுகின்றார்.

திருஅவையின் பாரம்பரியத்தில் அன்னை மரியாவிற்கு பின்னர், எந்த புனிதரும், வளனாரைப் போல அதிகமாக பேசப்படவும் இல்லை, பாராட்டப்படவும் இல்லை. திருஅவையின் எந்த அறிக்கையும், கடிதங்களும் இவரைப்பற்றி பேசாமல் முடிவடைவதில்லை. 1870 ஆம் ஆண்டு திருத்தந்தை இவரை, அகிலஉலக திருஅவையின் பாதுகாவலராகக் கண்டார், 12ம் பத்திநாதர் இவரை தொழிலாளர் களின் பாதுகாவலராகக் கண்டார், புனித 2ம் யோவான் பவுல் இவரை நல் மரணத்தின் பாதுகாவலராகவும், மீட்பரின் பராமரிப்பாள ராகவும் அடையாளப்படுத்துகிறார். இப்படியாக 150 ஆண்டுகளுக்குப் பின்னர், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நினைவுகளை மீட்டிப்பார்க்கிறார். இந்த தொற்று நோய் காலம், பல அவலங்களை மனுக்குலத்திற்கு கொடுத்து, மனுக்குலத்தில் பலவீனங்களையும், மனித அறிவு மற்றும் கண்டுபிடிப்புக்களின் மட்டுப்படுத்தப்பட்ட தன்மையையும் அடையாளம் காட்டுகிறது.

அதேவேளை சில ஆச்சரியமான தகவல்களையும் கொரோனா பரவல் அடையாளம் காட்ட தவறவில்லை. நம்மோடு பலர் தொடர்ச்சி யாக கூட இருக்கிறார்கள், ஆனால் அவர்களை நாம் தொடர்ச்சியாக மறந்து விடுகின்றோம். அவர்களை இந்த கொரோனா காலம் நமக்கு அடையாளம் காட்டுகிறது. அவர்களை பற்றி தொலைக்காட்சியோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரியோ, வானொலியோ சாதாரணமாக பேசுவதில்லை. அவர்கள்: வைத்தியர்கள், தாதியர்கள், பண்டக்காப்பாளர்கள், திறன் சந்தை பணியாளர்கள், துப்பரவு பணியாளர்கள், நலன்புரி சங்கத்தினர், போக்கு வரத்து பணியாளர்கள், அடிப்படை வசதிகள் மற்றும் சேவைகளை வழங்கும் ஆண் பெண் பணியாளர்கள், நலன் விரும்பிகள், தன்னார்வ பணியாளர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் இவர்க ளைப் போல பலர்.

இந்த உலகில் யாரும் தனிமையாக இல்லை, நாம்தான் தனிமை யாக இருப்பதாக உணர்கின்றோம் அல்லது நம்மோடு இருப்பவர் களை அடையாளம் காண தவறுகின்றோம். புனித வளனார் இந்த மறக்கப் பட்டவர்களை நமக்கு அடையளாம் காட்டுகிறார். அவர் அடையாளம் இல்லாதவர்களின் அடையாளம். அடையாளம் இல்லாதவர்கள் என கருதப்பட்டவர்கள்தான் மீட்பின் வரலாற்றையே திசைமாற்றியவர்கள். இங்கனம் தன்னுடைய மடலில் வளனாரின் அழகிய பண்புகளை பற்றி முன்னுரை சொல்லி, வளனாருக்கென்று ஏழு தந்தைப் பண்பு களை முன்மொழிவு செய்து நம்மை சிந்திக்க தூண்டுகிறார் திருந்தந்தை அவர்கள்.

## அவர் ஓர் இனிமையான தந்தை

அன்னை மரியாவிற்கு துணைவராக இருந்ததும், மீட்பருக்கு தகப்பனாக இருந்ததும் வளனாரின் சிறப்பியல்புகள். இப்படியாக புனித யோன் கிறிஸ்சோஸ்டத்தின் கூற்றுப்படி, வளனார் முழு மீட்பின் வரலாற்றுக்குமே பணியாளராக இருக்கிறார். ஆறாம் சின்னப்பர் திருத் தந்தையின் கூற்றுப்படி, வளனார் மீட்பு வரலாறு முழுவதற்கும் தன்னை தியாகபலியாக செலுத்தியிருக்கிறார். குடும்பத்தின் தலவராக இருந்தாலும், மீட்பின் திட்டத்தின் பொருட்டும், குடும்பத்தில் தாய் மற்றும் பிள்ளையின் மேன்மையின் பொருட்டும் தன்னை அவர் எப்போதுமே அவர்களின் பணிக்கு உவந்தளித்தார்.

இந்த இனிமையான பண்பினால்தான் அனைத்து கிறிஸ்த வர்களும், வளனாரை தங்கள் சொந்த தகப்பனாக பார்த்து, வணக் கம் செலுத்துகிறார்கள். எண்ணற்ற ஆலயங்களும் அவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயருக்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கின்றன. இதனால்தான் எண்ணற்ற சபைகள், துறவற மடங்கள், மூன்றாம் சபைகள், உலக சபைகள், பக்திச் சபைகள், போன்றவை அவரை பார்த்து வளர்ந்தன. இவர்களுள் அவிலா திரேசம்மா மிக முக்கியமானவர், அவர் வளனார் பக்தியை மற்றய துறவறத்தாருக்கு ஒரு ஆலோசனையாகக் கொடுக்கிறார்.

பழைய ஏற்பாட்டில், எகிப்தில் பஞ்சம் ஏற்பட்டபோது, மக்கள் பார்வோனிடம் உணவுக்காக கையேந்திய வேளை, பார்வோன் 'யோசேப்பிடம் போங்கள்' என்ற முழக்கத்தைக் கொடுத்தார் (தொ.நூல் 41,55), அதேபோல இக்கால பஞ்சங்களில் கொடுமையிலிருந்து தப்பிக்க புதிய ஏற்பாட்டு யோசேப்பிடம்-வளனாரிடம் போவது மிக முக்கியமானதாக அமைகிறது.

## அவர் அன்பிரக்கமுள்ள தந்தை

கடவுள் தன்னை வெவ்வேறு உருவகங்களில் காட்டுகிறார். அதில் மிக முக்கியமான உருவகம் தந்தை உருவகம். கடவுள் தந்தையாக இஸ்ராயேலை வளர்த்தது போல (ஒசேயா 11,3-4), வளனார் இயேசுவை வளர்த்தவர். இயேசு, வளனாரில் கடவுளின் கனிவான இதயத்தைக் கண்டு கொண்டார். இயேசு இரக்கத்தின் ஆழத்தை தன் வளர்ப்புத் தந்தையிடம் இருந்து கற்றிருப்பார் (தி.பா 103,13). இந்த உலகம் இரக்கமற்ற தன்மையை நீதி எனவும், தீர்ப்பு எனவும், வீரம் எனவும் போதிக்கிறது. கடவுளுடைய நீதி, தீர்ப்பளிக்காமல் அரவணைக்கிறது. கடவுளுடைய நீதி, வீதிக்கு வந்து, மனமாறுகிறவரை வாழ அழைக்கிறது (லூக் 15,11-32), நமக்கான மாண்பை திருப்பித் தருகிறது.

ஆரம்பத்தில் வளனார் பின்வாங்கிய போதும், கடவுளுடைய திட்டம்தான் வளனாரையும் வழிநடத்தியது. இதனைக்கொண்டே, வாழ்வில் சோதனைகள் வந்தாலும், கடவுளின் திட்டத்திற்கு இடமளிக்க வேண்டும் என்பதை புனித வளன் அனைவருக்கும் கற்றுக் கொடுக்கிறார். வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வும் நம்முடைய கட்டுப்பாட்டில் இல்லை என்பதற்கு வளனாரின் வாழ்வு ஒரு உதாரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர் ஒரு கீழ்ப்படிவுள்ள தந்தை

யோசேப்பு எப்போதும் கீழ்படிவானவராகத் திகழ்ந்தார். கனவுகள் அக்காலத்தில் இறைவெளிப்பாடாக கருதப்பட்டன. யோசேப்பும் கனவுகளை, கடவுளின் வெளிப்பாடாக கருதி கீழ்ப்படிந்தார். மரியாவின் கற்பைப் பற்றிக் கேள்விப்பட்ட யோசேப்பு அவரை இகழ்ச்சிக்குள்ளாக்காமல் மறைவாக விலக்கிவிட திட்ட மிட்டார். இந்த மனக்குழப்பத்தில் அவர் இருந்தபோது, வானதூதர் அவருக்கு தெளிவான செய்தியைக் கொடுக்கிறார் (மத் 1,20-21), உடனடியாக அவர் கீழ்ப்படிகிறார். கீழப்படிவு அவருக்கு மரியாவை ஏற்றுக்கொள்ள ஒரு வாய்ப்பினைக் கொடுக்கிறது.

இரண்டாவது கனவு, அவரை எகிப்திற்கு மரியாவையும் குழந்தையையும் கொண்டுபோகச் சொல்கிறது (மத் 2,13). இந்த கனவிற்கு கீழப்படிந்து அவர் மெசியாவை எகிப்திற்கு கொண்டு செல்கிறார். எகிப்பதிலிருந்து தன்னையும் தன் குடும்பத்தையும் கடவுள் வெளிக்கொணர்வார் என யோசேப்பு ஆழமாக நம்பினார் அதுவும் நடைபெற்றது (மத் 2,19-20).

அடுத்த கனவு, வளனை யூதேயாவிற்கு குழந்தையுடன் செல்லாது, கலிலேயாவிற்கு செல்லச் சொல்கிறது. நான்காவது தடவையாக வளன் கீழ்ப்படிந்து நாசரேத்தில் தன் இல்லத்தை அமைத்துக் கொள்கிறார் (மத் 2,22-23).

லூக்கா நற்செய்தியில் வளன் சட்டங்களுக்கு மிகவே கீழ்படிந்து இயேசுவை பெத்லேகேமிற்கு கொண்டு சென்றவராகவும் (லூக் 2,7), பிறக்கும் ஆண் குழந்தைகளுக்கு செய்யப்படும் விருத்த சேதனம், பெயரிடுதல், காணிக்கை கொடுத்தல் (லூக் 2,21-24) போன்றவற்றை கீழ்படிவோடு செய்வதையும் காட்டுகிறது. இப்படியாக தன்னுடைய அனைத்து செயற்பாடுகளிலும், தான் கடவுளின் அடிமை என்பதை, மரியா தன்னுடைய பாடலில் காட்டியதுபோல, வளன் தன்னுடைய மௌனமான செயற்பாட்டில் காட்டுகிறார். தன் குடும்பத்தின் தலைவராக, இயேசுவிற்கு கீழ்ப்படிதலை வளன் கற்றுக்கொடுக்கிறார் (லூக் 2,51). தன்னுடைய மறைவான, முப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருட வாழ்க்கையில், இயேசு கீழ்ப்படிவை வளனாரிடம் இருந்துதான் கற்றிருக்க வேண்டும். கடவுளுக்கு கீழ்படிவதை விட இயேசு தன்னுடைய உணவாக எதையும் காட்டவில்லை (யோவான் 4,34).

வளன் குடும்பத்தலைவராக இருந்தாலும், தன்னுடைய மகன்தான் மெசியா என்பதையும், தன் மனைவி இறைவனின் தாய் என்பதையும் சரியாக புரிந்து கொண்டு, இந்த இருவருக்கும் கீழ்படிவது தான் தன்னுடைய வாழ்வின் நோக்கம் என்பதை அறிந்துகொண்டார். வளனாரின் கீழ்ப்படிவைக் கண்டுகொண்ட இயேசு, அவரிடமிருந்து கீழ்படிவின் இரகசியத்தை கற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

## அவர் ஓர் ஏற்றுக்கொள்கின்ற தந்தை

தன்னுடைய சந்தேகத்திற்கு விளக்கம் கொடுக்கப்பட்டவுடனேயே, வளன் மரியாவை முழுமையாக ஏற்றுக்கொண்டார். அவர் சட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட மனசாட்சிக்கும், அன்பிற்கும் முக்கியத்துவம் கொடுத்தவர். இன்றைய உலகம் பெண்களுக்கு வன்முறையையும் அடக்குமுறையையும்தான் அதிகமாக கொடுக்கிறது, இந்த வன்முறை நிறைந்த உலகிற்கு, யோசேப்பு நல்லதொரு சவால்.

இந்த உலகில் நடைபெறும் அனைத்தும் நமக்கு உடனடியாக புரிவதில்லை, புரியாதவேளைகளில் உடனடியாக நாம் மனம் சோர்ந்து விடுகின்றோம். வளன் இப்படியான புரியமுடியாத சந்தர்பங்களில் தியானித்தார், கடவுளுக்கும், மனிதருக்கும் முக்கியத்துவம் கொடுத்தார், அதனால் பல உண்மைகளை கண்டுகொண்டார், வரலாற்றில் மிக முக்கியமான மனிதராக மாற்றம் பெற்றார். நாம் நம்முடைய சொந்த வரலாற்றை சரியாக புரிந்து கொள்ளாதவரை, அந்த வரலாற்றில் கடவுளுக்கு இடம்கொடுக்க மாட்டோம்.

வளன் நமக்கு காட்டுகின்ற ஆன்மீக பயணம், புரிந்து கொள்ளும் பயணம் அல்ல மாறாக ஏற்றுக்கொள்ளும் பயணம். அவர் முதலில் ஏற்றுக்கொண்டார், அதனால் தன் வரலாற்றை புரிந்துகொண்டார். இதனால் வளனாரை நாங்கள் செயலற்ற மனிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என எடுக்கக்கூடாது, அவர் எப்போதும் செயல் ஊக்கம் கொண்ட வராகவே இருந்தார். அவருடைய ஏற்றுக்கொள்ளும் தன்மை ஒரு தொடர் செயற்பாடு. அவரைப்போல நம்முடைய வாழ்விலும், இந்த ஏற்றுக்கொள்ளும் பண்பு தூய ஆவியாரின் ஒரு கொடையாக இருக்கலாம். கடவுளால் மட்டும்தான் நமக்கு, நம் வாழ்வில் வரும் துன்பம், சோர்வு, மனத்தாழ்வு, போன்றவற்றில் வாழ்வின் யதார்த் தங்களை ஏற்றுக்கொள்ளும் பண்பை தரமுடியும்.

கடவுள் வளனுக்கு சொன்னது (மத் 1,20) நமக்கும் எதிர் ஒலிக்கிறது. கடவுள் நம்மை அச்சம் கொள்ள வேண்டாம் என்கிறார். நம்முடைய கோபங்கள், சோர்வுகள், தோல்விகள் என்பவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு, வாழ்வின் நிகழ்வுகள், நாம் எதிர்பார்த்தபடி வராவிட்டா லும் அவற்றை ஏற்றுக்கொள்ள பழகவேண்டும். இதனை நாங்கள் மனவிரக்தியோடு செய்யாமல், மனவீரத்தோடு செய்யவேண்டும், அதனால் வாழ்வின் ஆழமான அர்த்தத்தைக் கண்டுகொள்ளலாம். இதனால் நம்முடைய வாழ்வு சிலவேளைகளில் மீள பிறக்கலாம். சிலவேளைகளில் நம் வாழ்வின் நிகழ்வுகள் பாரதூரமானதாக இருந்தாலும், அவற்றிலும் நம்மைக் காக்கக்கூடியவர் கடவுள் (1யோவான் 3,20).

வளனாரில் நாம் கற்றுக்கொள்ளும் நம்பிக்கை என்பது, ஒரு செயலற்ற அமைதியல்ல, மாறாக அது உற்சாகம் நிறைந்தது. வளன் குறுக்கு வழிகளைக் கண்டுபிடிக்கவில்லை, அவர் சீரான பாதைகளைத்தான் தேர்ந்தெடுத்தார்.

மற்றவர்களை அவர்களாகவே, அவர்களின் மாண்புடனும் மரியாதையுடனும் ஏற்றுக்கொள்ளும் பண்பை நாம் வளனிடம் இருந்து தான் கற்றுக்கொள்ளவேண்டும். வளன் சமுதாயத்தில் பலவீனமானவர் களை மரியாதையோடு ஏற்றுக்கொண்டார். காணாமற்போன மகன், மற்றும் இரக்கமுள்ள தந்தை (லூக்கா 15,11-32) என்ற இயேசு ஆண்டவரின் அழகான உவமைக்கு பின்னால் இருக்கும் உண்மை யான மனிதர் வளனாகத்தான் இருந்திருக்கவேண்டும், வளனாரிடம் இருந்துதான் இயேசு இதனை சிந்தித்திருப்பார் என திருத்தந்தை தியானிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர் திடமான, பணியாற்றும் தந்தை

நாம் வாழ்வில் துன்பங்களை அதிகமாக சந்திக்கின்றபோது, ஒன்றில் அதிலிருந்து தப்பி ஓடலாம், அல்லது அதனை எதிர்கொண்டு வாழப் பழகலாம். அதனை எதிர்கொண்டு வாழப்பழகுகின்றபோது, சிலவேளைகளில் அழகான உண்மைகளையும் சந்திக்கலாம்.

இயேசுவின் குழந்தைப் பருவ நிகழ்வுகளில் கடவுள் நேரடியாக பேசாமல், சந்தர்ப்பங்கள் மற்றும் மனிதர்கள் மூலமாகத் தான் பேசுகிறார். இது ஒரு ஆச்சரியம். மீட்பின் வரலாற்றில் நாம் சந்திக்கும் முதலாவது ஆச்சரியமான மனிதர் வளன். தன் மகனை யும், மரியாவையும் காக்க கடவுள் பயன்படுத்திய ஆயுதமும் வளன்தான். யோசேப்பின் திடமான பணியாற்றும் திறன்தான் இவற்றை செய்தது. சத்திரத்தில் தன் மனைவிக்கும், பிறக்கவிருந்த மகனுக்கும் இடம்கிடைக்காத போது, ஒரு மாட்டுத்தொழுவத்தையே அழகான ஆலயமாக மாற்றியவர் வளன் (லூக் 2,6-7). ஏரோது எவ்வளவு கொடுங்கோலனாக இருந்தாலும், வளனின் திடத்தின் முன் அவன் ஒன்றுமில்லை (மத் 2,13-14).

இயேசுவின் பிறப்பு நிகழ்வுகளை அர்த்தமில்லாமல் வாசித்தால், பலமானவர்களும், அதிகாரம் படைத்தவர்களும் தான் வரலாற்றை ஆட்சிசெய்கிறார்கள் என எண்ணத்தோன்றும். ஆனால் உண்மையில் கடவுளின் திட்டம் தான் அமைதியானவர் என்பதன் வாயிலாக நிறைவேறுகிறது என்பதுதான் நற்செய்தி தருகின்ற உண்மை. நாம் சில வேளைகளில் தனிமையாக விடப்பட்டால், கடவுள் நம்மை கைவிட்டுவிட்டார் என்று பொருளல்ல மாறாக அவர், நம்மிடம் இருந்து வித்தியாசமாக எதையோ எதிர்பார்க்கிறார் என்று பொருள்.

இயேசுவின் காலத்தில் பலர் வித்தியாசமாக யோசித்தனர், அதனால் நலமும் பெற்றனர். முடக்குவாதமுற்றவரை கூரையை பிரித்து இறக்கியவர்களின் நம்பிக்கை, அந்த நோயுற்றவரை நலமாக்க காரணமாக அமைந்தது (லூக் 5,17-26). யோசேப்பு மரியா இயேசு எவ்வளவு காலம் எகிப்தில் இருந்தார்கள் என்று நற்செய்திகள் தெளிவாக சொல்லவில்லை, ஆனால் அங்கே வளன் உழைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டி இருந்திருக்கும். இன்றைய உலகில் புலம்பெயர்ந்தவர்கள் சந்திக்கின்ற ஒவ்வொரு சவாலையும் வளன் சந்தித்திருந்திருப்பார். ஆனால் அவர் அதனை நல்ல விதத்தில் எதிர்கொண்டு வெற்றி கொண்டவர். இன்றைய உலகில், போர், வன்முறை, கலவரங்கள் காரணமாக புலம்பெயரும் ஒவ்வொரு அகதிக்கும் வளனார் ஒரு நேர்முகமான உதாரணம்.

நற்செய்திகளின் படி, தன்னுடைய ஒவ்வொரு கட்டத்திலும், வளன் எழுந்து மரியாவையும் இயேசுவையும் கொண்டுசென்றார் (மத் 1,24: 2,14.21) என்று காட்டப்படுகிறது. இதற்கு காரணம், வளன் தன்னுடைய வாழ்வில் மிக முக்கியமான சொத்தாக இயேசுவையும் மரியாவையும் கண்டுகொண்டதுதான். இந்த அவசரமான உலகில் இயேசு மற்றும் மரியா என்ற பொக்கிசங்களை நாமும் பாதுகாக்கவேண்டும், தூக்கிக்கொண்டு செல்லவேண்டும். சர்வ வல்லமை படைத்த இறைமகன், சாதாரண மனிதராக பிறந்தார், அவர் பாதுகாக்கப்பட, அரவணைக்கப்பட, வளர்க்கப்பட வேண்டியிருந்தது, அதனை வளன் சரியாக புரிந்துகொண்டு செய்தார். இதனைத்தான் அவர் மரியாவிற்கும் செய்தார். இயேசுவின் மறையுடல்தான் திருஅவை, மரியாவின் வாழ்வுதான் திருஅவை. வளன் அன்று இயேசுவிற்கும், அன்னை மரியாவிற்கும் செய்ததை இன்று திருஅவைக்கு செய்கிறார்.

நம் சமுதாயத்தில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குழந்தையும், நோயுற்ற, கைவிடப்பட்ட, மாற்றுத்திறனுடைய, துன்புறுத்தப்படுகின்ற குழந்தை ஒவ்வொன்றும் இயேசுவை அடையாளம் காட்டுகிறது, அவர்களையும் வளன் பராமரிக்கிறார். இதனால்தான் வளனார், கைவிடப்பட்டவர்கள், அகதிகள், ஏதிலிகள், ஏழைகள், வறியவர்களின் பாதுகாவலராக கொண்டாடப்படுகிறார். இவர்களை நாமும் திருஅவையும் மறந்துவிடக்கூடாது, வளனாரின் முயற்சிகள் நம்மில் தொடரப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர் ஓர் உழைக்கும் தந்தை

திருத்தந்தையரின் முதலாவது சமூக நீதியின் சுற்றுமடலான 'ரேரும் நோவாரும்' (*Pope Leo XIII's Rerum Novarum,*) வளனாரின் பெயரைத்தான் தாங்கி வருகிறது. ஒரு தச்சனாக வளன், உழைத்து தன் குடும்பத்தைக் காத்தார், வளனிடமிருந்துதான் உழைப்பின் நோக்கம், மகத்துவம் போன்றவற்றை இயேசு கற்றிருக்க வேண்டும்.

வேலைவாய்ப்பு ஒரு பெரிய கேள்வியாக வந்திருக்கும் இந்த காலத்தில், வேலைவாய்ப்பின்மை மனித குலத்திற்கே பெரும் ஆபத்தாக அமைகிறது. உழைப்பு என்பது, கடவுளின் படைப்புத் திட்டத்தில் பங்கேற்பதாகும். இன்னொரு வகையில் இறையாட்சியை விரைவாக கொண்டுவருவதற்கான ஒரு முயற்சிதான் மனித உழைப்பாகும். உழைப்பு ஒவ்வொரு குடும்பத்தையும் இந்த சேவையில் ஈடுபடுத்துகின்றது. உழைப்பில்லாத குடும்பம் ஒவ்வொன்றும், துன்பம், ஆபத்து, போட்டி, உறவுப்பிறழ்வு போன்ற ஆபத்துக்களையே நோக்கியே செல்கிறது. உழைப்பில்லாமல் மனித மாண்பில்லை.

## அவர் ஒரு மறைவான தந்தை

போலாந்து நாட்டு எழுத்தாளர் ஜான் தொப்ராசின்ஸ்கி (Jan Dobraczyński) 'தந்தையின் நிழல்' (*The Shadow of the Father*) என்ற நாவலில் வளனாரைப் பற்றி எழுதுவதை திருத் தந்தை நினைவுகூறுகிறார். கடவுளின் பூலோக நிழல்தான் வளன் என்ற அழகான தியானம் தரப்படுகிறது. வளனார் இயேசுவை நிழல் போல தொடர்ந்தார். இயேசுவை அவர் தனியாக விடவில்லை. பழைய ஏற்பாட்டில் முக்கியமாக பாலைவனத்தில் கடவுள் நிழல் போல இஸ்ராயேலரை வழிநடத்தியதைத்தான், இயேசுவிற்கு வளன் செய்தார் (இணைச்சட்டம் 1,31).

தந்தையர்கள் பிறப்பதில்லை மாறாக அவர்கள் உருவாக் கப்படுகிறார்கள். ஒரு குழந்தையை பெற்றெடுப்பதால் ஓர் ஆண் தந்தையாக மாறுவதில்லை, அந்த குழந்தையை உருவாக்குவ தாலேயே அவன் தந்தையாக மாற்றம் பெறுகின்றான். யாருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்விலும் ஒருவர் பங்கேற்பளாராக மாறுகின்றபோது, அவர் தந்தையாக மாறுகின்றார். இவ்வுலகில் பல குழந்தைகள் தந்தையரைத் தேடுகிறார்கள், ஏன் திருஅவையே தந்தையரைத் தேடுகிறது. ஒவ்வொரு குருவும், ஆயரும் பவுலுடன் சேர்ந்து தன்னை ஒரு தந்தையாக இனம்காண வேண்டும் (1கொரி 4,15).

தந்தையர் குழந்தைகளுக்கு உண்மைகளை கற்றுக்கொடுக்கிறார்கள். குழந்தைகளை அடக்காமல், வாழ்வின் நியமங்களையும், யதார்த்தங்களையும் அவர்கள் எதிர்கொள்ள பயிற்சிகொடுக்கிறார்கள். இதனால்தான் என்னவோ, அதி விரதத்துவமான வளனாரே என்று, வளனார் அழைக்கப்பட்டிருக்கலாம். கற்பு என்பது ஒரு சுதந்திரம், கற்புள்ள மற்றும் தூய்மையான அன்பு மட்டும்தான் உண்மையான அன்பு, அதனை நாம் வளனாரிடம் இருந்து மட்டும்தான் கற்றுக் கொள்ளலாம்.

கட்டுப்படுத்துகின்ற அல்லது அடக்குமுறை செய்கின்ற அன்பு, ஆபத்தான அன்பாக அமையலாம். கடவுளும், கற்புநிறை அன்போடே மானிடத்தை அன்பு செய்கிறார். நாம் அவரை பிரிந்து சென்று, அவரை துன்புறுத்தினாலும், அவர் நம் சுதந்திரத்தை பறிப்பதில்லை. அன்பு என்றால் அது உண்மையான சுதந்திரம். வளன் அன்பையும் சுதந்திரத்தையும் சரியாக பயன்படுத்தியவர். பொருட்களை தன் வாழ்வின் மையமாக அவர் வைத்ததே இல்லை. தன்னையும் தன் வாழ்வின் மையமாக அவர் வைத்ததும் இல்லை, மரியாவும் இயேசுவும்தான் அவர் வாழ்வின் மையமாக இருந்தார்கள்.

தன்னை தியாகமாக கொடுப்பதில் வளன் தான் நிகர். அவர் சோர்வடைந்ததாக நாம் கேள்விப்பட்டதே இல்லை. வளனாரின் அமைதி அவருடைய ஆழமான ஞானத்தைக் காட்டுகிறது. நம்முடைய உலகத்திற்கு இன்று வளனைப்போன்ற தந்தையர்கள் தேவை. முரட்டுத்தனமான தந்தையர்களால் பயனில்லை. அதிகார வெறிபிடித்த தந்தையர்கள், அடிமைப்படுத்தும் தந்தையர்கள், கொடுமைப்படுத்தும் தந்தையர்கள், சுயநலமான தந்தையர்கள், அழிவுப் பாதையில் செல்லும் தந்தையர்கள், போன்றவர்கள் வெறுக்கப்படுகிறவர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் உள்ள ஒவ்வொரு அழைப்பும் தியாகத்தால் நிறைந்ததுதான். குருத்துவமும் துறவறமும் முதிர்ச்சிபெற்ற தியாகமாக மாறவேண்டும். குருத்துவமோ திருமணமோ, துறவறமோ இல்லறமோ, தூய்மையோ, கன்னிமையோ, தியாகம் இல்லாமல் அர்த்தம் பெறமுடியாது. தியாகம் இல்லாமல் எந்த வாழ்வும் மகிழ் வாகவும், நிறைவாகவும் இருக்க முடியாது.

தந்தையர்கள் தங்கள் குழந்தைகளுக்காக வாழ தவறுவது மிகவும் வேதனையானது. ஒவ்வொரு குழந்தையும் ஓர் ஆச்சரியம், இந்த ஆச்சரியத்தை அடையாளம் காணக்கூடியவர்கள் தந்தை யர்களே. பயனற்ற தந்தையர்கள் என்று யாரும் இல்லை, அதே வேளை தந்தையர்கள் தங்கள் குழந்தைகளை தங்களுடைய உரிமைச் சொத்து எனவும் எடுக்கக்கூடாது. குழந்தைகள் கடவுளுடைய சொத்து. வளன் அதனை சரியாக புரிந்து கொண்டார். தந்தைத்துவம் என்பது அடக்குமுறை அல்ல, அது ஒரு பெரிய அடையாளம். ஏதோ ஒரு வகையில் நாம் அனைவரும் வளனாரே. கடவுளின் கண்ணுக்குத் தெரியாத விம்பங்கள் நாங்கள். வளனாரைப் போல இயேசுவை நெருக்கமாக பின்பற்றுவோம்.

## முடிவுரை

இப்படியாக திருத்தந்த்தை பிரான்சிஸ்கு தனது அழகான சிந்தனைகளால் புனித வளனாரை நம்முடைய வாழ்வில் கொண்டு வருகிறார். புனித வளனாரை பின்பற்றி அவர் பரிந்துரையை தேடுவதே தன்னுடைய மடலின் நோக்கம் என்பதையும் அவர் தெளிவு படுத்து கிறார். வளனாரிடம் இருந்து வெறும் புதுமைகளையும், அற்புதங்க ளையும் எதிர்பார்க்காது, அவர் புண்ணியங்களை பின்பற்றிக் கண்டுபாவிக்கக் கேட்கிறார். எந்த புனிதர்களாக இருந்தாலும் அவர்கள் இயேசுவை மையப்படுத்தியவர்கள் என்பதையும் திருத் தந்தை அழகாக கோடிடுகிறார். வளனாரிடம் இருந்து கற்றுக் கொள்வோம், மனமாற்றம் அடைவோம் என்பது திருத்தந்தையின் முடிவுரையாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தந்தையின் செபம்

மீட்பரின் காவலரே வாழ்க,

நீர் கன்னி மரியாவின் துணைவர்,

கடவுள் உம்மிடம்தான் தன் மகனை ஒப்படைத்தார்,

உம்மிடம் மரியன்னை தன் நம்பிக்கையை ஒப்படைத்தார்.

உம்மோடு கிறிஸ்து மனிதராக வந்தார்.

வளனாரே எங்கள் தந்தையாகவும் வாரும்,

வாழ்வின் பாதையிலே நடத்தும்.

அருளையும், இரக்கத்தையும், திடத்தையும் பெற்றுத்தாரும்,

அனைத்து தீமையிலிருந்தும் எம்மை காத்தருளும்,

ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிவிலியத்தில் கொள்ளைநோய்களை நம்பிக்கையோடு எதிர்கொண்ட விதமும் இன்றைய சூழ்நிலையில் கோவிட் - 19 மத்தியிலே இறைபராமரிப்பும்

அருட்பணி அ. கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ
தியான இல்லம்,
மடு, மன்னார்

## முன்னுரை

இன்று பல கோடிப்பேரை முடக்கிவிட்ட, பல இலட்சம் உயிர்களைப் பறித்தெடுத்த, முழு உலகையுமே அடக்கிவிட்ட கொரோனா வைரஸ் பற்றி இந்த உலகம் பூராகவும் பேசுகின்றோம், அஞ்சி நடுங்குகின்றோம். உயிரைக் காத்துக்கொள்ள எல்லா வழிகளையும் கையாளுகின்றோம்.

நாம் வாழும் உலகின் வல்லரசுகளையே நிலைகுலையச் செய்து, திக்குமுக்காட வைத்து, ஒன்றரை வருடத்திற்கு மேலாகவும் நம்மை அடக்கியாண்டு, உயர்ந்தவன் தாழ்ந்தவன், ஏழை பணக்காரன், மேல் சாதி கீழ் சாதி, அரசியல்வாதி குடிமகன், நல்லவன் கெட்டவன், ஆட்சியாளன் அடிமை, கீழைத்தேயம் மேலைத்தேயம் என்ற பாரபட்சமின்றி நாளாந்தம் எண்ணிக்கையற்ற விதமாக பல்வேறு கோணங்களில் கட்டுங்கடங்காமல் பரவிவருகின்ற கொரோனா என் கின்ற தொற்றுநோயின் பயங்கரமான காலச்சூழ்நிலைக்குள், முகமூடி மனிதர்களாக, கூடிச்சேர்ந்து குழுமமாக வாழ வழியற்றவர்களாக, தனித்திருத்தலே பாராட்டுதலுக்குரியதும் சிறந்ததும் என்று, மனிதனை மனிதன் அண்டிவர பயந்துகொண்டு, தூரமாய் இருத்தலே வாழவைக்கும் என்ற எண்ணத்தோடு, தொட மறுக்கின்ற கரங்களும், வீடுகளுக்கு மற்றவர்கள் வராமல் இருந்தால் நல்லது என்று தவிர்த்துக்கொண்டு நலம் காக்கும் சுகாதார விதிமுறைகளுக்குள் இந்த உலகம் முழுவதையுமே தள்ளிவிட்டு வாழ்வா சாவா? என்ற உயிர்காப்பு போராட்டத்திலே, உயிர்காத்தலே போதும் என்ற துர்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியமான துயரம் நிறைந்த வாழ்க்கைப் பயணத்தை சந்தித்தவர்களாக பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

சீனாவில் ஹீபேய் மகாணத்தின் தலை நகரமான வூகான் நகரில் ஆரம்பமானதாக கூறப்படும் இவ்வைரஸ் (COVID19) உருவாகி ஏறத்தாழ பதினெட்டு மாதங்கள் (ஒன்றரையாண்டு) முடிவடைந்த நிலையில் சுமார் இதுவரை 14.3 கோடிக்கு அதிகமானோர் தொற்றுக் குள்ளாகியுள்ளனர். மேலும் 30.5 இலட்சத்துக்கு அதிகமானோர் உயிரிழந்ததுடன் 12.1 கோடிக்கு அதிகமானோர் குணமடைந்துள்ள னர். இந்த நோயினை முற்றாக நூறு வீதம் முறியடிக்கும் வகையில் எந்த ஒரு தடுப்பு மருந்தும் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை என்பது விஞ்ஞான ரீதியாக நோக்கும் போது தொடுதிரை உலகிலே கொடிகட்டிப் பறக்கும் முழு மனித விஞ்ஞான உலகமுமே தலை குனிய வேண்டிய விடயமாகும். மருத்துவ ரீதியாக பல ஆய்வுகளை யும் ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டு அதில் பல வெற்றியும் கண்டுள்ள தலைமுறையில் வாழும் நாம் நோய்தொற்றை ஏற்படுத்தும் கண்ணுக்கு புலப்படாத நுண்ணுயிர் துணிக்கைகளை கட்டுப்படுத்த முடியாத நிலையில் பதினெட்டு மாதங்களாக அதற்கெதிரான போராட்ட சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இறுதியாக 08 மாசி 2021 அன்று உலக சுகாதார நிறுவனம் (WHO) கோவெக்ஸ் (COVAX) என்ற நோய்எதிர்ப்பு மருந்தை அறிமுகப்படுத்தியது. ஆயினும் இந்தக் கண்டுபிடிப்பும் முழுமையாக கொரோனா வைரஸை விரட்டி ஒழிக்கக்கூடிய பூரண பலன் கொண்டதாக இல்லை என்பதை உலக சுகாதார நிறுவனமே ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த ஆய்வுக்கட்டுரையிலே கொடிய தொற்றுநோயான கோவிட் 19 குறித்து திருவிவிலியத்தில் எவ்வாறான சான்றாதாரங்கள் காணப்படுகின்றன என்றும், இவ்வாறான தொற்றுநோய்களின் மத்தி யிலே இறைபராமரிப்பு எவ்வாறு அந்நேரங்களில் செயலாற்றியது என்றும், இந்த அவலம் நிறைந்த தொற்றுநோயின் காலத்திலே நமது நம்பிக்கையின் செயல்கள் எவ்வாறான வடிவங்கள் பெற வேண்டும் என்றும் அறிந்துகொள்ள முற்படுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிவிலியத்தில்
## கொள்ளைநோயின் பரம்பலும் தாக்கமும்

இதுவரை உலகில் தோன்றிய பல நோய்களான மலேரியா, எபோலா வைரஸ், பிளக், பன்றிக்காய்ச்சல் மற்றும் பல தொற்று நோய்கள் குறிப்பிட்ட சில நாடுகள் அல்லது கண்டம் என்ற வரையறையுடன் தோற்றம் பெற்று ஆதிக்கம் செலுத்தியுள்ளது. ஆனால் கொரோனா மட்டுமே தனது கோரதாண்டவத்தினை உலகமெங்கும் தடம் பதித்துள்ளது. பல நாடுகளில் இந்நோய்த்தாக்கம் தீவிரமாக இருந்தாலும் கணிப்புகள் ரீதியாக வல்லரசு நாடுகளான அமெரிக்கா, இத்தாலி, பிரான்ஸ், பிரித்தானியா, ஜேர்மனி, ஸ்பெயின், இந்தியா போன்ற நாடுகளிலேயே அதிகம் தொற்று பரவியுள்ளமை கண்கூடானதாகும்.

இவ்வைரசானது சீனாவின் "Wuhan Institute of Virology" எனும் ஆய்வுகூடத்தில் செயற்கையாக உருவாக்கிய நிலையில் அங்கிருந்தே கசிந்திருக்கலாம் என சில விஞ்ஞானிகளின் கருத்தாக அமைந்திருந்தாலும் அதற்கான நிருபண ஆதாரங்கள் இல்லாத படியால் பல கண்டனங்களும் எதிர்ப்புக்களும் இதைக்குறித்த ஆய்வுகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டே வருகின்றன.

இந்த வைரஸ் எப்படி வந்தது என்று பல ஆராட்சிகளும் கருத்துக்களும் இருந்தாலும் பொதுவாக இன்றுவரையில் இந்த கொடிய நோய் உணவாலேயே வந்தது என்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. மனிதன் உண்ட ஒரு உணவு அவனுக்கு இந்த கொடிய தொற்றுவியாதியை கொண்டு வந்தது என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

திருவிவிலியத்திலே உணவு என்பது எப்போதுமே ஒரு சவாலாகவே காணப்படுகின்றது. தொடக்கநூலிலேயே ஆதாம் ஏவாள் பாவம் செய்யக்காரணமாக இருந்தது ஒரு உணவுதான் என்பதை பார்க்கின்றோம் (தொநூ 3:6). ஒரு உணவினால்தான் இந்த உலகத்திலே பாவம் வந்ததாகவும், அந்தப்பாவம் பன்மடங்கு பரவி அதை அழிக்க முடியாத அளவிற்கு தளைத்துவிட்டதையும் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்கின்றோம் (தொநூ 3:15). மோசேயுடைய காலத்திலும் மக்கள் உணவுக்காக அழுதார்கள் (எண் 11:5,10). அவர்கள் கடவுளுக்கு விரும்பாத காரியங்களை செய்த படியால் அவர்கள் கேட்ட உணவை உண்பதற்கு முன்னமே கொடிய கொள்ளைநோயால் துன்புற்றார்கள் என்று சொல்லப்படுகின்றது.

## திருவிவிலியத்தில்
## கொள்ளைநோய் மூன்று வடிவங்களில்

ஒன்று, விடுதலைப் பயணம் 7ம் அதிகாரத்திலே எகிப்திலே கடவுள் இஸ்ராயேல் மக்களை விடுவிக்க எகிப்தியருக்கு கொள்ளை நோய்களை தண்டனையாக அனுமதித்தார் என்பதைக் காண்கிறோம். இதில் நாம் ஒன்றைப்புரிந்து கொள்ளத்தான் வேண்டும். அதாவது கடவுள் அன்பானவர்தான். மன்னிக்கிறவர்தான். ஆனால் கடவுள் தீமையை வெறுக்கின்றவர். எங்கெல்லாம் பாவம் தலைதூக்கி கடவுளே இல்லை என்று மனிதன் செயற்பட முற்படுகின்றானோ அங்கே கடவுள் உண்டு என்பதை மனிதன் உணரப்பண்ணுகின்றவர் கடவுள். தீமையை அழிக்க இறைவனால் மேற்கொள்ளப்படும் தொடக்கமே அதுவாக காணப்படுகின்றது. இதைத்தான் அன்பான கடவுள் மன்னிக்கின்ற கடவுள் எகிப்திலே செய்தார். அவர்கள் செய்வது பிழை என்றதை கடவுள் அவர்களுக்கு மோசே வழியாக பலவழிகளில் சுட்டிக்காட்டினார். ஏன் மோசேயை அனுப்பி கடவுள் பார்வோனிடம் கெஞ்சியும் பார்த்தார். ஆனால் கடின இதயம்கொண்ட பார்வோனும் அவன் பரிவாரங்களும் இதைக்கேட்கவில்லை. அதற்கு பிறகுதான் தீமையினை அழிக்க கடவுள் கொள்ளைநோய்களை தண்டனையாக அனுமதித்தார்.

ஆண்டவரிடம் தீமை இல்லை. அவர் தீமையினை விதைப்பவர் அல்ல மாறாக தீமையினை விரும்பாத கடவுள். இன்னும் ஒன்றை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். எகிப்திலே இந்த பத்துவிதமான வருத்தங்களும் இருந்தன என்பதை இன்றும் புராதன அகழ்வாராய்ச்சிகள் எண்பிக்கின்றன. ஆனால் கடவுள் இஸ்ராயேல் மக்களின் பொருட்டு அவ்வாறான கொள்ளை நோய்களை கட்டுப்படுத்தியிருந்தார். ஆனால் எப்போது எகிப்தியர் கடவுளை எதிர்த்து பழித்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களோ அப்போதுதான் கடவுள் அவர்களை அந்த கொள்ளை நோய்களுக்கு கையளித்தார் என்பதே உண்மையாகும்.

இரண்டாவது, அலகை தன்னால் ஒரு ஆன்மாவை அழிக்க முடியாமல் போகின்ற போது இன்னொரு துணையை பயன்படுத்து கின்றது. அதற்காக அலகை கட்டவிழ்த்து விட்ட தீமையாக கொள்ளைநோய் காட்டப்படுகின்றது. இதை 1 குறிப்பேடு 21 இலே நடந்த ஒரு சம்பவத்தின் வழியாக அறிந்துகொள்கிறோம். சாத்தான் இஸ்ராயேலருக்கு எதிராக எழும்பி இஸ்ராயேலரைக் கணக்கெடுக்கு மாறு தாவீதைத் தூண்டினான். இக்கணக்கெடுப்பு கடவுளின் பார்வையில் தீயதெனப்பட்டது. இதனால்தான் அவர்களுக்கு தீமை நேர்ந்தது. அப்போது ஆண்டவர் காத்து என்கின்ற இறைவாக்கினரை தாவீதிடம் அனுப்பி 'மூன்று காரியங்களை தெரிவாக முன்வைக் கின்றார். ஒன்று, மூன்று ஆண்டுகள் பஞ்சம், இரண்டாவது, எதிரிகளின் வாள்களுக்கு இரையாகுதல், மூன்றாவது இஸ்ராயேல் நாடு முழு வதும் வருகின்ற கொள்ளை நோய். ஆண்டவர் தாவீதின் முன்பாக இந்த மூன்று காரியங்களை வைப்பதாகவும், அவற்றுள் ஒன்றை தாவீது தேர்ந்துகொள்ளவும் வேண்டும்' என்கிறார். அப்போது தாவீது எதைத் தேர்ந்துகொண்டார்? கொள்ளை நோயை தேர்ந்து கொண்டார். அதற்கான காரணத்தையும் தாவீது காத்து இறைவாக்கினருக்கு சொல்லுகின்றார். அதாவது முதல் இரண்டு தீமைகளை தாவீது தேர்ந்தெடுத்தால் அவர் மனிதர் கையில் அகப்பட்டு மனிதர்களிடம் கெஞ்ச வேண்டியிருக்கும். ஆகவே இந்த மூன்றாவது தீமையாகிய கொள்ளைநோயை தேர்ந்தெடுத்து ஆண்டவர் கையில் சரணடைவதே மேல் ஏனெனில் ஆண்டவர் மிகவும் இரக்கமுள்ளவர்' என்கிறார்.

இந்த நோய் இஸ்ராயேலருக்கு வரக்காரணம் என்ன? இங்கே தாவீதை அலகை பயன்படுத்துகின்றது. அதன் பலனாக கொள்ளை நோய் வந்து 70 ஆயிரம் பேர்கள் மடிந்தார்கள். இந்த கொள்ளை நோய்க்கு காரணம் யார் தாவீது. அவனது வைராக்கியம், நான் என்ற அகங்காரம் கடவுளின் பார்வையில் கொள்ளைநோயை அனுமதித் தது. இன்று இது நமக்கெல்லாம் ஒரு பெரிய பாடமாகவே காணப் படுகின்றது. இன்று கடவுளின் வார்த்தைகள் மறக்கப்பட்டு, கடவுளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பம் புறந்தள்ளப்பட்ட காலமாகவே இக்காலம் காணப்படுகின்றது. ஊனும் உடலும் ஆன்மாவை வென்றுகொண்டிருக்கின்றது. சாத்தான் உலக மாயைகளான பதவி பணம் பொருள் அளவுக்கதிக ஆசைகள் பட்டம் என்ற கருவிகளைக் கொண்டு மனிதர்களை விழுங்கிக் கொண்டிருக்கின்றான். தவறான கொள்கைகள், வீணான பிடிவாதம் இவற்றால் அலகை வென்றுகொண்டிருக்கின்றது. இதன் விளைவுதான் இன்றைய தீமையின் வடிவங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

மூன்றாவதாக, இன்னொரு காரணத்திற்காக கொள்ளைநோய் வந்ததைப் பார்க்கின்றோம். எண் 25:1-3 சொல்லுவதைப் போலவும் திவெ 2:14 இலே நாம் பார்ப்பதைப் போலவும், பிலயாம் என்கின்ற ஒரு கள்ள இறைவாக்கினரின் தவறான போதனைகளால் இந்த கொள்ளைநோய் வந்தது. இதனால் 24000 பேர்கள் வரையிலே இறந்து போனார்கள்.

இப்படியாக, கடவுளின் விருப்பத்திற்கு அவரது மீட்பு அலுவலிற்கு பார்வோன் தடையாக நின்றதாலும், தாவீது கடவுளின் முன்பாக அவரது திருவுளத்தை உணர்ந்து செயற்படாததாலும், கடவுளின் இறைவாக்கினன் என்று தன்னை அடையாளப்படுத்திய பிலயாம் என்பவனின் போதனை கடவுளின் எண்ணங்களிலிருந்து மாறுபட்டதாக இருந்ததாலும் கொள்ளைநோயை ஆண்டவர் அனுமதித்தார்.

## இந்தக் கொள்ளைநோய்கள் எப்படி நின்று போயின?

இரண்டு சம்பவங்களை திருவிவிலியத்திலே காண்கின்றோம்:

ஒன்று, செபத்தால். இதை எண் 17: 46 இலே காண்கின்றோம். மோசே ஆரோனிடம் 'உன் தூபக் கலசத்தை பலிப்பீடத்திலிருந்து எடுத்து அதில் நெருப்பையும் தூபத்தையும் போட்டு விரைவாக அதனை மக்கள் கூட்டமைப்பினரிடம் கொண்டுபோய் அவர்களுக்காக கறைநீக்கம் செய் ஆண்டவரிடமிருந்து கடுஞ்சினம் புறப்பட்டுவிட்டது. கொள்ளைநோய் தொடங்கிவிட்டது என்றார். ஆரோன் பாவ நிவர்த்திசெய்து தூபம் போட்டான். இந்த செபத்தால் அந்த கொடியநோய் நின்று போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது, பாவ அறிக்கை செய்ததால் வந்த கொள்ளை நோய் இல்லாமல் போனது. இதை 2 சாமு 24:25 இலே தாவீது தான் புரிந்த தீயசெயலை உணர்ந்து பாவ அறிக்கை செய்தார். அவரது பாவ அறிக்கையும் மனமாற்றமும் வந்த கொள்ளைநோயை இல்லாமல் பண்ணிற்று. முதல் ஏற்பாடாகிய பழைய ஏற்பாட்டிலே பாவஅறிக்கை செய்கின்றவர் ஒரு ஆட்டுக்குட்டியை ஆசரிப்புக்கூடாரம் என்கின்ற தூயகத்தின் முன்பாக கொண்டுபோய் அதன் தலையிலே கைகளை வைத்து தான் செய்த பாவத்தை அறிக்கையிட வேண்டும். இரண்டாவது, அவர் அந்த ஆட்டுக்குட்டியை ஒரு பலிப்பீடத்தின் மேல் பலிகொடுக்க வேண்டும். இது எதைக்குறிக்கின்றது? நாம் நம்முடைய பாவத்தையும் நமது நாட்டினுடைய பாவத்தையும் முழு உலகத்தினுடைய பாவத்தையும் அறிக்கை செய்ய வேண்டும். அப்படி செய்கின்றபோது நமக்காக சிலுவையில் மரித்த இயேசுவின் இரத்தத்தால் நாம் நிச்சயமாக கழுவப்படுவோம். நாம் நமது குடும்பங் களில் நமது சமூகத்திலே பரிசுத்த ஆவியாருக்கு ஒரு பலிப்பீடம் கட்ட வேண்டும். அந்தப் பலிப்பீடத்திலே நமது பாவங்களை நாளாந்தம் ஏற்று அறிக்கையிட்டு தூய ஆவியாரால் தூண்டப்பெற வேண்டும்.

## இந்தக் கொடிய கொரோனாவின் காலத்திலே இன்று நாம் செய்யவேண்டியது என்ன?

ஒன்று, தனது மக்களுக்காகவும் தனது தேசத்துக்காகவும் செபித்த தானியேலைப்போலவும், நெகேமியாவைப்போலவும் நாமும் பாவ அறிக்கை செய்து செபிக்க வேண்டும்.

இரண்டாவது, கடவுளோடு தனித்து இணைந்திருக்க வேண்டும். நோவாவின் அழிவின் போது குடும்பம் பேழைக்குள்ளே கடவுளோடு தனித்திருந்து. இறைவனோடு ஒன்றிப்பில் நிலைத் திருந்தது. எகிப்தில் கொள்ளைநோய் வந்தபோது இஸ்ராயேல் மக்கள் தங்கள் வீடுகளுக்குள் தனித்திருந்தார்கள். இறைவனோடு அவரது விருப்பம் அறிந்துகொள்ள நிலைத்திருந்தார்கள். எரிக்கோ பட்டணம் அழிக்கப்பட்டபோது ராகாபின் வீட்டார் தங்கள் வீட்டிற்குள் தனித்திருந்தார்கள். கடவுளோடு செபத்திலே இடைவிடாமல் இணைந்திருந்தார்கள். அவ்வாறே நாமும் கடவுளோடு நமது இடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாத நம்பிக்கையுள்ள செபத்தால் இணைந்திருக்க வேண்டும். ஒருவர் மற்றவரை நம் ஆழமான நம்பிக்கையால் பலப்படுத்த வேண்டும்.

மூன்றாவதாக, நாம் இந்த அழிவுகளையும் நாளாந்த இறப்புக் களையும் கண்டு பயப்படக்கூடாது. ஆனால் முன்மதியோடு செயற் படல் வேண்டும். வேதாகமத்தில் 300 க்கும் அதிகமான வார்த்தைகள் பயப்படாதே பதறாதே என்றே நம்மை திடப்படுத்துகின்றன. கடவுளின் வல்லமையுள்ள வார்த்தையே நமக்கு அரணும் கோட்டையும் நம் கேடயமுமாக இருக்க வேண்டும்.

## இறைவனை நம்பி அடைக்கலம் புகுவோம்

நம்மைச் சுற்றிலும் விண்ணக தூதரணிகளைக் கொண்டு வேலியடைத்து பாதுகாக்கின்ற கடவுள் நம்முடைய கடவுள். திருப் பாடல் 91 அறிக்கையிடுவது போல 'வாதை எங்கள் கூடாரத்தை நெருங்காது. ஏனெனில் நாம் உன்னதரின் பாதுகாப்பில் வாழ்கின் றோம். எல்லாம் வல்லவரின் நிழலிலே தங்கியிருக்கின்றோம். நாம் செல்லும் இடமெல்லாம் நம்மைக் காக்கும்படி தம் விண்ணுலக தூதர்களுக்கு ஆண்டவர் கட்டளையிடுகிறார். நாம் இந்த கொடிய துயரத்தால் மூழ்கி வீழ்ந்துவிடாதபடி அவர்கள் தங்கள் கைகளில் தாங்கிக்கொள்கிறார்கள்'. இந்த வார்த்தைகள் நமக்கு எண்ணில டங்காத பலத்தைக் கொடுக்கின்றன. இத்திருப்பாடல் இறைவனை நம்பி அடைக்கலம் புகுவோரை அவர் அனைத்துத் தீமைகளிலி ருந்தும் பாதுகாக்கிறார் என்று சொல்லி, என்னென்ன வழிகளில் இறைவன் பாதுகாத்திருக்கிறார் என்ற நீண்ட பட்டியலையும் தந்து, இறைவனுடைய உடனிருப்பு அவர்களோடு என்றும் இருந்தது என்ற இஸ்ராயேல் மக்களின் வாழ்வு அனுபவத்தையும் விரிவாகச் சொல்லி எம்மையும் அதே வாழ்வியல் அனுபவத்திற்கு அழைத்து நிற்கிறது. எவ்வித பாதுகாப்புமின்றி, எவ்வித உத்தரவாதமுமின்றி, எவ்வித நிபந்தனையுமின்றி 'கடவுளே நீர் தான் என் கதி' என ஆண்டவரிடமே நாம் அடைக்கலம் தேடல் வேண்டும். இறைவனிடமே முழுமையாகச் சரண் அடைதல் வேண்டும். கடவுளின் அளவிட முடியாத இறை பராமரிப்பை நாளாந்தம் இந்த கண்களுக்கு புலப்படாத நுண்ணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொற்றுக்கிருமியின் பரம்பலின் மத்தியிலும், தாக்கத்திலும் அனுபவித்துக் கொண்டே இருக்கின்றோம் என்பதை நாம் மறந்து போகக்கூடாது.

## இறைபராமரிப்பு பொய்த்துப்போகாது

இஸ்ராயேல் மக்கள் இறைபராமரிப்பு மற்றும் பாதுகாப்பை தங்கள் வாழ்வு அனுபவத்திலிருந்து உணர்ந்து கொண்டு இறைவனிடம் தங்களையே முழுமையாகக் கையளித்து அடைக்கலம் புகுந்தனர் (எரே 5:22-24, திபா 104, திபா 148:6). இஸ்ராயேல் மக்கள் பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட கடுமையாக போராடினர் (விப 34:10 எண் 16:30 எசா 43:1). பல்வேறு முயற்சிகளைச் செய்தார்கள் (விப 14:10-31, 19:4-6 திபா 90). சில சமயங்களில் தந்தையாம் இறைவனிடமிருந்து விலகிச்சென்று தங்கள் திறமைகளில் நம்பிக்கை வைத்துப் போராடி, தோல்வியைச் சந்தித்தனர். இறைபராமரிப்பில் நம்பிக்கை கொண்டு முயற்சி செய்யும் போது வெற்றியடைந்ததை, காலப்போக்கில் அறிந்து கொண்டனர் (திபா 78 யோசு 24 நீத 5). புதிய ஏற்பாட்டிலும் நமது துன்பங்கள் மத்தியிலே இறைபராமரிப்பின் அருட்கரம் எவ்வாறு நம் மட்டில் செயற்படுகின்றது என்பது அடிக்கடி நமக்கு ஞாபகப்படுத்தப்படு கின்றது (மத் 10:29-31 உரோ8:2-4 1 கொரி 1:27 கலா 4:7 எபே 1:3-14). நாமும் பல தடவைகளிலே ஏன் இந்த கொடிய கொள்ளைநோயான கோவிட் 19 இந்த உலகை இப்படி துன்பப் படுத் வேண்டும்? ஏன் கடவுள் இதை அனுமதித்தார்? ஏன் இதை நிறுத்துவதற்கு கடவுள் இன்னுமளவிற்கு நம்மீது இரக்கம் காட்டவில்லை? என்று பல்வேறு கோணங்களில் நின்று நமது துயரத்தின் கனாகனம் எல்லைமீற கடவுளிடம் கண்ணீரோடு கேள்வி கேட்கின்றோம். இந்த வேளைகளில்தான் முதல் ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்கள் அனுபவித்த, அவர்கள் எதிர்கொண்ட வாழ்வியல் சவால்களும், இறுதியில் அவர்களது இறை அனுபவமும் இன்று நமதாக வேண்டும்.

இதைத்தான் 'அனாவிம்' அனுபவம் என்று திருவிவிலியம் சொல்கிறது (திபா 37:11 149:4 எசா 49:13). 'அனாவிம்' என்ற எபிரேய சொல்லுக்கு இறைவன் பேரில் முழுமையான நம்பிக்கைக் கொண்டவர் என்பது பொருள். எவ்வித பாதுகாப்புமின்றி, உத்தரவாதமுமின்றி, இறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராமரிப்பில் நம்பிக்கை கொண்டு நமது முயற்சிகளை மேற்கொள்ளும்போது நமது துன்பங்களை மகிழ்ச்சியோடு தாங்கிக் கொள்ளும் சக்தியும் அவற்றிலே வெற்றியும் பெறுகிறோம் என்பதை இறை நம்பிக்கையாளர்களின் வாழ்விலேயிருந்து நாம் கண்கூடாக கண்டுகொள்கிறோம்.

## முடிவுரை

கொரோனா வைரஸ் காரணமாக பொருளாதாரம் சீரழிந்து விட்டது, ஒருவேளை உணவுக்காக ஏங்கும் மக்கள் பெருகிவிட்டனர், தனிமையும், நோயும், வறுமையும் நம்மை சூழ்ந்து கடவுள் மீது உள்ள நம்பிக்கை இன்று புடமிடப்படுகின்றது. குறித்த வைரஸ் (COVID19) ஏனைய வைரசுகளிடமிருந்து சில வித்தியாசங்களை கொண்டிருக்கிறது. கூர்ப்பு ரீதியாக தனது வடிவத்தில் மாற்றம் மேற்கொள்வதோடு வழங்கப்படும் தடுப்பு மருந்திற்கு எதிராகவும் இயல்புகளை மாற்றி கொள்கின்றது என்பதை மருத்துவம் ஏற்றுக்கொள்கின்ற போது நமது இறைநம்பிக்கை இங்கே மேலோங்க வேண்டும்.

நம் வாழ்வில் எத்தனை துன்பங்கள் வந்தாலும், நோய்கள் நெருக்கினாலும், ஆண்டவர் மீது வைத்துள்ள நம்பிக்கையை உறுதிப் படுத்துவோம். நமது நம்பிக்கையை நங்கூரமாக்குவோம். நமக்கு நம்பிக்கையை தரும் உறவுகளை அதிகம் வளர்த்துக் கொள்வோம். நமது வாழ்வில் நாம் எதிர்கொள்கின்ற ஒவ்வொரு துன்பமும், வருத்தமும், இழப்பும் கடவுளின் அன்பை இன்னும் ஒருபடி நாம் அனுபவிக்கவும், அவற்றின் மத்தியிலே கடவுளின் கரம் எப்படி எம் மட்டில் செயலாற்றுகிறது என்பதை விளங்கிக் கொள்ளவும் காரணமாகின்றன என்பதை புரிந்து கொள்ளுவோம். 'இதோ! இஸ்ரயேலைக் காக்கின்றவர் கண்ணயர்வதும் இல்லை உறங்குவதும் இல்லை' (திபா 121:4) என்ற வார்த்தைகள் இந்த பொல்லாத கோவிட் 19 தொற்றுநோயின் பரம்பலின் மத்தியிலும், அதன் விளைவாக நாம் அனுபவிக்கும் அனைத்து அசௌகரியங்களிலும் அடிக்கடி நமது எண்ணங்களில் நிழலாடட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவர்களின் புனித யோசேப்பின் ஆண்டில் விடுதலை வாழ்வுக்கான புனித யோசேப்பின் வழிகாட்டுதல்கள்

அருட்தந்தை எஸ். ஜே. இம்மானுவேல்
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்

## புனித யோசேப்பின் ஆண்டு 2021

2021ம் ஆண்டை புனித வளனாரின் ஆண்டாக அனுசரிக்கும் படி, திருத்தந்தை பிரான்சிஸ் எமக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார். இதற்காக *தந்தையின் உள்ளத்துடன் (Patris corde)* என்ற தலைப்பில் ஓர் அழைப்பு மடலையும் 10.2020 இல் வெளியிட்டுள்ளார். இந்த பிரகடனத்திற்கு, சரித்திரரீதியாக ஒரு காரணமுண்டு. அதாவது திருக் குடும்ப தலைவர் புனித வளனாரை, 150 வருடங்கட்கு முன்பு உலக திரு அவையின் பாதுகாவலராக பிரகடனப்படுத்தியுள்ளார். அதை நினைவு கூர்ந்து, 2021ம் ஆண்டை இக்கால உலகத்திற்கு தேவையும் பொருத்தமுமான புனித வளனாரின் ஆண்டை திருத்தந்தை பிரகடனப் படுத்தியுள்ளார்.

## புனித பிரான்சீசினால் தூண்டப்பட்ட திருத்தந்தை உலகம் முழுவதற்கும் விடுத்த இரட்டை அழைப்புகள்

தற்போதைய திருத்தந்தை இயேசு சபை குருவாக இருந் தாலும், இந்த உலக சிருட்டிப்புகளையும் மனிதரையும் ஆளமாக நேசித்த, புனித அசீசி பிரான்சீசின் சிந்தனைகளினால் தூண்டப்பட்டு மனுக்குலம் முழுவதையும் ஊக்குவிப்பவர். அதனாலேதான் திருத் தந்தையின் பொறுப்பையேற்று, தமக்கு முன்னிருந்த 16ம் ஆசீர் வாதப்பர் தொடங்கிய *நம்பிக்கையும் பகுத்தறிவும்* (Faith and Reason) என்ற சுற்று மடலை முடித்து விட்டு, தனது சொந்த ஆர்வத்தில், இரண்டு சுற்று மடல்களை வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ) மனுக்குலம் தமது ஒரே வீட்டை பாதுகாக்க வேண்டிய கடமையை பற்றி விளக்கினார். (*Laudato si* - humanity responsibly protecting its only home planet earth),

ஆ) மனுக்குலம் முழுவதும் பொது நலனுக்காக ஒற்றுமையுடன் செயற்பட வேண்டிய தேவை பற்றி விளக்கினார். (*Fratelli tutti* - Urgent need of whole humanity uniting as one brotherhood to face challenges for survival)

## இரட்டை அழைப்புகளை கிறிஸ்தவர்கள் கடைப்பிடிக்க பொருத்தமான ஆண்டு

மனுக்குலம் முழுவதற்கும் தாம் விடுத்த இந்த இரண்டு சுற்று மடல்களின் வேண்டுகோள்களையும், கிறீஸ்தவர்கள் ஒன்றாக கடைப் பிடிக்க, ஓர் நல்ல பொருத்தமான புனிதரின் வாழ்க்கையை பின் பற்றும் காலத்தையும் தேர்ந்தெடுத்தார்.

புனித வளனார், திருக்குடும்பத்தின் தலைவனாக இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர், இறைத் திட்டத்தை புரியாதிருந்தும், தமது உன்னத அழைத்தலையும் கணவன் - பொறுப்பையும், எப்படி ஓர் பிரமாணிக்க யூத நம்பிக்கையாளனாக ஏற்று, தந்தையின் உள்ளத் துடன், மரியாளுக்கு தீங்கு இழைக்காது, மரியாளையும் இயேசு வையும் காப்பாற்றினார்.

உலகத்தை மனுக்குலத்தின் ஒரே வீடாக பொறுப்பேற்கவும், *(Laudato si)*, மனுக்குலம் முழுவதும் ஒன்றுபட்டு ஒரே சகோதரர்க ளாக வாழ்க்கையின் சவால்களிற்கு முகங்கொடுக்க வேண்டும் *(TuttiFratelli)* என்பதும், மனுக்குலத்தின் தற்போதைய பொறுப்பு. இந்த இரண்டு அறை கூவல்களையும், கிறீஸ்தவர்கள் இலேசாக இன்று கடைப்பிடிப்பதற்கு, ஒரு மிக பொருத்தமான நம்பிக்கையின் உருவத்தை புனித வளனாரில் கண்டார். அவர் யூதனாக இருந்தும், மனுக்குலத்திற்கு நன்மையானதென தம்மேல் பணிக்கப்பட்ட பொறுப்பை ஏற்று துணிவுடன் முழுமூச்சுடன் செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல், மனுக்குலமும் தற்போது தனக்கிருக்கும் இரு சவால்களை கடைப்பிடிப்பதற்கு, மதங்களின் எல்லைகளை தாண்டி, இறை விசுவாசத்திலூன்றி, ஒரே வீட்டை பாதுகாக்க பொறுப்புடன் இயற் கையையும் வளங்களையும் செயற்படவேண்டும். அதேவேளை மனித வாழ்க்கைக்கு அபாயமான சவால்கள் - கொரோனா மாத்திரமல்ல, பூகோள அரசியல் பொருளாதார வன்முறை பிரச்சினைகளை - இவை களை முழு மனிதரின் பொது நலனுக்காக தீர்க்க முயலவேண்டும்.

## தமிழ் கிறிஸ்தவர்களின் சமகால பொறுப்பு

இச் சூழலில்தான் தமிழ் கிறிஸ்தவர்கள், புனித வளனாரின் வாழ்வுதாரணத்தை வைத்து தமது சமகால கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

தற்கால தமிழ் சமூகத்தின் விடுதலை பயணம் பல சவால்கள் நிறைந்த வாழ்வாக இருக்கின்றது. தமிழினம் தமிழினமாக நீண்ட விடுதலை பயணத்தில் இன்று ஒரு முக்கிய கட்டத்தில் உள்ளது.

இதற்குள் தமிழ் கிறிஸ்தவர்கள், ஒரு சிறுபான்மையாக இருந்தாலும், கிறிஸ்துவின் ஒளியாகவும் உப்பாகவும், எல்லோரையும் இறையரசை நோக்கிய பயணப் பார்வையுடன் ஊக்குவிக்கும் சக்தியாக பயணம் செய்ய, செயற்பட அழைக்கப்பட்டிருக்கின்றோம். இருந்தும் நாம் எமது சூழலில் எழுந்த இனப்பிரச்சினையை பொறுத்த மட்டில் எமது கிறிஸ்தவ அழைப்பிற்கு பிரமாணிக்கமாக நடக்காது பெரும் தவறு செய்துள்ளோம்.

## தமிழ் கிறிஸ்தவர்களின் கடந்த கால தவறு

1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்த பின், கிறிஸ்த வர்கள் நாம் எம்மை ஒரு மிகச் சிறிய மதமாகவும் (7%) ஐரோப்பிய உருவமும், ஊற்றும் கொண்டதாகவும் கணித்து, மற்றைய மதங்கள் மத்தியில் பய-மனப்பான்மையுடன் பணிந்து நடந்தோம். தொகையி லும் ஊற்றிலும் இலங்கையை எமக்கு உரிமையுள்ள நாடல்ல. உண்மை. ஆனால், பல்வேறு விதத்தில் இனத்தாலும் மதத்தாலும் வேறுபட்டு பிரச்சினைகள் நாட்டின் ஒற்றுமை சமாதானத்தை கடினப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திய காலத்திலும் சூழலிலும், எல்லோரையும் ஒற்றுமையாக சமாதானப் படுத்த கூடிய அனுகுலமான சக்திகளை கொண்டிருந்தோம். வட-கிழக்கில் தமிழரையும் தென் பகுதி சிங்களவரையும் இணைப்பதற்கான அறிவாளிகளையும் அமைப்புகளையும், ஓர் உலக மதத்தின் செல்வாக்கையும் நாம் பெற்றிருந்தோம்.

இருந்தும் எமது மௌனம், அநீதிக்கெதிராக எதிர்ப்பு தெரிவிக்காது, அரசியலை விலக்கி செயற்படாது ஒதுங்கி நின்றது பெரும் தவறு. இத் தவறு நாடு முழுவதும் பெரும் உயிரிழப்புகளையும் அழிவுகளையும் கொண்டு வந்திருக்கிறது. இத் தவறுக்கு முக்கிய காரணங்கள் இரண்டு.

1. தமிழ்-சிங்கள உறவை ஏற்படுத்த, கிறிஸ்தவர்களின் அனுகூல முக்கியத்துவத்தை உணராது (strategical importance to link communities & promote understanding, peace) , மௌனமாக ஒதுங்கி செயற்படாதிருந்தோம்.
2. இன-மத பிரச்சினைகள் எல்லாம் அரசியலை சார்ந்தவை என்ற பிழையான உணர்வில், மனித பிரச்சினைகள் பாதிப்புகளுக்கு பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக அரசியல்-எதிர்ப்புகளில் (political-protests) ஈடுபடாது விலத்தி நின்றோம்.

எமது அரசியல் பொறுப்பை ஏற்று நடக்க இனியாவது இவ் ஆண்டில் புனித வளனாரின் துணிவுடனும், இன்றைய திருத்தந்தையின் ஊக்குவிப்புடனும், மத இன எல்லைகளை - சிங்கள, தமிழ், முஸ்லீம், புத்த, இந்து - கடந்து, எமது சமகால விடுதலை பயணத்தில், பொதுநல உணர்வுடன் எல்லா மக்களுக்கும் உண்மை, நீதி, மனித உரிமைகள் அடிப்படையில், ஒற்றுமை சமாதானம் நிலவ, திருத்தந்தை ஊக்குவிக்கும் நல்ல அரசியலில் ஈடுபடுவோமாக.

அதாவது இன-மத வெறுப்பின்றி, பயங்கரவாதம் பழிவாங்கலின்றி, உணர்சியில் மாத்திரம் தங்கியிராது, அரசியல் கட்சிகளுக்கு அடிபணியாது, இறை ஒளியில் கிறிஸ்தவ மனச்சாட்சியுடன் நடந்து கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாளர் திருத்தந்தை 9ம் பத்திநாதர்

அருட்சகோதரன் N.அஜந்தன் அ.ம.தி.
2ம் வருட இறையியல்
புனித பிரான்சிஸ்கு சவேரியார்
குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை

திரு அவையின் தலைமைப்பீட வரலாற்று தடங்கள் பல் வேறுபட்ட சீர்திருத்தங்கள், அதிகாரப்போக்குகளின் இப்புரட்சிகள், சார்ப்பு மனப்பாங்குகள் போன்ற அத்தியாயங்களை தன்னகத்தே கொண்டதனின் பெரும் வரலாறு ஆகும். திருஅவைத்தலைவர்கள் யாவரும் திரு அவையின் வளர்ச்சிப்பாதையில் இறைவனுக்காக தம் வாழ்வை அரப்பணித்து காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றங் களை மேற்கொண்டு அதன் புனித தன்மை மங்காது பாதுகாப்பதில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு துணிவுடன் தம் சேவையை வழங்கினர். என்பது வரலாற்று உண்மையாகும். இந்த பின்புலத்தில் நோக்கும் போது ஒரு சில திருத்தந்தையே, தற்துணிவுடன் பல்வேறு முடிவுகளை திருஅவையின் எதிர்காலத்தைக் கருதி மேற்கொண்ட வர்கள் ஆவர். அவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவரே திருத்தந்தை புனித 9ம் பத்திநாதர் ஆவார். இவரே திரு அவையின் தலை மைப்பீடத்தை அதிககாலம் அலங்கரித்தவரும், நவீன யுகத்தின் போக் கினை உணர்ந்து, முதல் வத்திகான் சங்கத்தை கூட்டி திருத்தந்தை யரின் வழுவாவரம் பின் மரியன்னையின் அமல உற்பவம் சந்தேகத் திற்கிடமற்ற உண்மை எனும் விசுவாச சத்தியங்களையும் பிரகடனம் செய்தவராவார். மேலும் புனித வளனாரின் காவலில் திருஅவையை ஒப்படைத்து அவரை திருஅவையின் பாதுகாவலராக அறிவித்தவரும் இவர்தான்.

## இளமைப்பருவம்

திருத்தந்தை 9ம் பத்திநாதர் 1792ம் ஆண்டு மே மாதம் 13ம் நாள் இத்தாலி தேசத்திலுள்ள ஓர் பிரபு குடும்பத்தில் ஜோர்லாமோ மஸ்தாய் பொராதிக்கும் கத்தரினா செலாட்சிக்கும் ஒன்பதாவதாகவும் கடைசிப்பிள்ளையாகவும் பிறந்தார். பெற்றோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்கிட்ட பெயர் ஜோவாள்ளி மரிய மஸ்தாய் பெரேத்தி என்பதாகும். ஆரம்ப கல்வியை தன் தாயிடம் கற்றுத்தேர்ந்து 11 வயதில் துஸ்கனியிலுள்ள புனித மிக்கேல் பாடசாலைக்கு தன் இடைநிலைக்கல்வியைத் தொடர அனுப்பப்பட்டார். 1812ல் இவர் ஒரு வகையான வலிப்பு நோயினால் அவதிப்பட்டமையால் கட்டாய இராணுவ சேவை செய்வதிலிருந்து விதிவிலக்காக்கப்பட்டார். இக்காலத்தில் ஐரோப்பியாவில் போர் மேகங்கள் சூழ்ந்து காணப்பட்டமையினால் ஒரு வகையான அமைதியற்ற சூழலிலேயே இவரது இளம்பாராயம் கழிந்தது. ஆதனால மஸ்தாய் பெரேத்தி தன் கல்வியைத் தொடர உரோமிலுள்ள தனது மாமா பவுலிடம் அனுப்பப்பட்டார். அப்போது அங்கே ஆளுனர் நெப்போலியனுக்கும் திருத்தந்தை 7ம் பத்தி நாதருக்கும் இடையே திருஅவை ஆட்சி குறித்த போராட்டம் நிலவியது இதில் ஆளுநர் வெற்றி பெற்று திருத்தந்தையை நாடுகடத்த அவர் அவர்களை திரு அவையிலிருந்து வெளியேற்றினார் மஸ்தாய் பெராத்து தூய்மையிலும் சுய கட்டுப்பாட்டிலும் கண்ணியமாய் வாழ்ந்து சொல், செயல், சிந்தனையில் ஒழுக்கத்தை கடைபிடிக்க முனைந்தார்

## துறவற நோக்கம்

1816 ம் ஆண்டு தான் குருவாக வர வேண்டும் எனும் தன் ஆர்வத்தை வெளிப்படுத்தி இயேசு சபை குருக்களோடு இணைந்து ஒரு மறை ஆசிரியராக பணியாற்றினார். இவர் தனது வலிப்பு நோய் தான் ஒரு குருவாக வர தடையாகி விடுமோ என அஞ்சி அனுதினமும் ஆண்டவரிடமும், மரியன்னையிடமும் தன் நிலையை எடுத்துரைத்து மன்றாடி வந்தார். இவரது ஆசையையும் வேட்கையையும் அறிந்த திருத்தந்தை 7ம் பயஸ் அவரை ஓர் திறமையான குழுவின் கீழ் பயிற்றுவித்து அவரை உதவும் திருத்தொண்டராக 1818 ம் ஆண்டு திருநிலைப்படுத்தி 1819 ஏப்ரல் மாதம் 10ம் திகதி குருவாக திருநிலைப்படுத்தினார். பின் 1823 ம் ஆண்டு உரோமன் கத்தோலிக்க திரு அவையின் பிரதிநிதியாக தென் அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஆனால் சிலி மற்றும் பேரு நாட்டு அரசுகள் உரோமினுடைய கூட்டுறவை ஏற்க மறுத்துவிட்டார். ஆனால் இது பெராதிக்கு பல்வேறு சுய அனுபவங்களையும் அவர்களது அரசியல் விவகாரங்களையும் நன்றாக அறிந்து கொள்ளும் ஓர் சந்தர்ப்பமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறியது. பின் உரோமிற்கு திரும்பி வந்து புனித மிக்கேல் வைத்தியசாலையின் பொறுப்பாளராக பணிபுரிந்தார்.

இவரது சிறப்பான பணியின் நிமித்தம் வருங்கால திருத்தந்தை 8ம் பத்திநாதர் அவர்கள் உம்ரியாவின் பேராயராக 1827 ம் ஆண்டு திருநிலைப்படுத்தப்பட்டார். இவரது மறைமாவட்ட குருக்கள் ஒழுக்க மில்லாமலும், சரியான நிர்வாக அமைப்புக்கள் இன்றி வழி தவறியவர் களாகவும் காணப்பட்டனர். இதனால் இவர் தனது சீர்திருத்த எண்ணங்களால் இவர்களது வாழ்வியல் போக்குகளை மாற்ற முனைந்தார். பின் இவர் 1832 ம் ஆண்டு திருநிலைப்படுத்தப்பட்டார். இவரது மறைமாவட்ட குருக்கள் ஒழுக்கமில்லாமலும், சரியான நிர்வாக அமைப்புக்கள் இன்றி வழி தவறியவர்களாகவும் காணப் பட்டனர். இதனால் இவர் தனது சீர்திருத்த எண்ணங்களால் இவர் களது வாழ்வியல் போக்குகளை மாற்ற முனைந்தார். பின் இவர் 1832 ம் ஆண்டு இமோலாவின் ஆயராக பணியை ஏற்க அனுப்பப் பட்டார். 1840ம் ஆண்டு கருதினால் நிலைக்கு உயர்த்தப்பட்ட இவர் பின் 1846ம் ஆண்டு திருத்தந்தை 16ம் கிரகோரி இறக்கவே சக கருதினால்களின் இரண்டில் மூன்று பெரும்பான்மை வாக்குக ளால் 9ம் பத்திநாதர் என்னும் பெயரில் திருத்தந்தையாக தெரிவுசெய்யப்பட்டார். இவரது நல்லாக்கமும் திரு அவை மறுசீரமைக்கவேண்டும் என்னும ஆவலும் இறை உடனிருப்பும் இவர் இந்த நிலையை அடைய ஆவன செய்ததை மறுக்க முடியாது.

## திருத்தந்தையாக

இவர் திருத்தந்தையாக பலரால் விருப்புடன் ஏற்கப்பட்ட பொழுதிலும் இவருக்கு எதிரானவர்கள் இல்லாமல் இல்லை. இவர் தனது திரப்பொளிவின் பொருட்டு கடன்சுமையினால் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பல ஏழை மக்களின் கடன்களைச் செலுத்தியும் தள்ளுபடி செய்தும் அவர்களை விடுவித்து தன் மறுசீரமைப்பு பணியைத் தொடங்கினார். ஏனெனில் திருப்பீடத்ததை சீரமைப்பதன் அவசியத்தை இவர் நன்கு அறிந்தவராய் இருந்தார். திருத்தந்தையின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்கள் ஆக்கிரமிப்பின் விளிம்பில் இருந்தன. ஏனெனில் திருத்தந்தையின் நட்பு நாடுகளின் சார்பு மிக குறைவாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டது. இத்தாலிய தேச வாதிகளின் எழுச்சியும் திருத்தந்தை யின் அரசியல் விவகாரங்களுக்கு ஓர் அச்சுறுத்தலாகவே காணப்பட்டது. பல்வேறு சவால்களை தற்துணிவுடன் எதிர்கொண்டார்.

1848ம் ஆண்டு நவம்பர் மாதம் 15ம் நாள் திருத்தந்தையின் செயலர் பாராளுமன்றத்துக்குள் நுளையும் பொழுது கொலை செய்யப்பட்டார். திருத்தந்தையின் உயிருக்கும் அச்சுறுத்தல் நிலவவே அவர் உரோமிலிரந்து நேபிள்ஸ்சுக்கு தப்பி ஓடினார். அத்தருணத்தில் யுசம்பே மட்சுனி எனும் இத்தாலிய தேசியவாத தலைவர் திருத் தந்தையின் அரசியல் ஆட்சியை கைப்பற்றி இத்தாலியை குடியரசு ஆட்சிக்குள் கொண்டுவந்தார். ஆனால் திருத்தந்தை 9ம் பத்தினாதர் தன் அரசியல் தந்திரம் அறிந்த 48 செயலர் அந்தோனெல்லியை இந்த சுழல்களை சரிசெய்ய அனுப்பினார். அவரும் திருத்தந்தையின் பிரதேசங்களை வெளிநாட்டுப்படையின் உதவியுடன் கைப்பற்றினார். இவர் நாடுகடத்தப்பட்ட நிலையில் இருக்கும்பொழுது அனைத்து அரசியல் விவகாரங்களையும் தன் செயலரிடமே கையளித்தார். 1850ம் ஆண்டு மரியன்னையின் அமலஉற்பவத்தை விசவாச சக்தி யாகவும் அதிஉயர் படிப்பினையாகவும் அறிவித்தார். அதுமட்டுமன்றி மரியன்னை விண்ணக மண்ணக அரசி என்னும் நாமத்தையும் வழங்கினார்.

குறிப்பாக திருத்தந்தையரின் வழுவாவரம் குறித்து பிரகடனம் மேற்கொள்ள வத்திகானிலே 1862ல் ஒரு பொது சங்கத்தை கூட்டினார். ஏனெனில் எவ்வித வெளியுலக அழுத்தங்களுக்கும் இடம்கொடாமல் விசுவாச சத்தியங்களை அதன் புனிதத்தனமை மங்காது பாதுாப்ப தென உறுதிபூண்டு பல சீர்திருத்த சட்டங்களை முன்வைத்து திரு அவையை புதிய பாதையில் வழிநடத்தலானார். திருத்தந்தையின் தப்பறைகள் அடங்கிய பாடத்திட்டம் அவரது நோக்கினையும் போக்கினையும் துல்லியமாக வெளிப்படுத்துகின்றன. இவரது இந்த சீரிய முடிவுகள் அவரது ஆட்சி நிலைக்கு சவாலாக அமைந்தலும் இறைவிசுவாசத்துடன் திருஅவையை புனித வளநாரின் அரவ ணைப்பில் ஒப்படைத்து திருஅவையை நவீனத்துவத்தின் மத்தியில் வழிநடத்தி 1878ம் ஆண்டு பெப்ரவரி 7 அன்று இறைவனுடன் ஒன்றித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்திப்பேறுபெற்றவராக

2000ம் ஆண்டு புனித திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் இருபெரும் திரு அவைத்தலைவர்களை அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். அவர்கள் முறைப்படி முதலாம் வத்திக்கான் பொது சங்கத்தின் தந்தை எனப்படும் திருத்தந்தை 9ம் பத்திநாதரும் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் தந்தையாகிய இருபத்து மூன்றாம் அருளப்பருமே ஆவர். இவர்கள் திரு அவையின் நலனில் கொண்ட அக்கறையும் ஆர்வமும் புனித நிலைக்கும் உயர்த்தும் அலுவல்களை விரைவுபடுத்த காரணமாய் அமைந்தது.

## நிறைவாக

இதயத்தில் சுதந்திர வேட்கையும் பாரம்பரியம் வழுவா ஆழ் விசுவாசமும் கொண்ட ஓர் உயர்ந்த மனிதரே திருத்தந்தை 9ம் பத்திநாதர். தன் அதிகாரத்தக்கு உட்பட்ட மக்களின் நல்வாழ்வி லும் ஆன்மீக வளர்சியிலும் விசேடமாக மரியன்னையின் பக்தியை பரப்புவதிலும் ஓர் தலைவராக விசுவாச சத்தியங்களை பிரகடனம் செய்வதிலும் பொதுச்சங்கங்கள் கூட்டி திருஅவையின் வளர்சிக்கான தீர்மானங்களை எட்டுவதிலும் தெளிவுடன் செயற்பட்டார்.

கரு அழிப்பு தொடர்பாக வாதாடியவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் 9ம் பத்திநாதர். கருவுருவாகிய தருணம் முதல் மனித ஆன்மா அக்கருவில் இருக்கிறது என்றும் அதை அழிப்து கொலைக்கு சமம் எனவும் சுட்டிக்காட்டினார்.

இவரது வாழ்வில் காணப்பட்ட தெளிவு துரநோக்கு துணிவு இறை விசுவாசம் விடாமுயற்சி சகிப்புத்தன்மை பிறரின் கருத்துக் களை ஏற்றுறுக்கொள்ளும் மனம் ஆகியவற்றை எம்வாழ்வில் கைக் கொண்டு வாழப் பழகுவோமேயானால் எம் தலைமைத்துவ பண்பு நிச்சயமாக வளம்பெற்று சமுதாயத்தில் நல்ல ஒரு தலைவராக எம்மால் மாறமுடியும் எனபதில் எவ்வித ஐயமும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SYNOPSIS

## St. Joseph – in the Salvation History

God chose the people of Israel, headed by Abraham, to fulfil His salvific promise and God chose Joseph from the descendent of David as the guardian of Jesus. We can clearly see how Joseph took part or God made use of him in His redemptive work.

In the synoptic gospel, Matthew and Luke describe Joseph's call and mission in the infancy narratives. Mark describes him as a carpenter (Mk 6: 3-40) and John confirms Jesus is the son of Joseph from Nazareth (Jn 1:45).Bible describes Joseph as a man of deep faith, righteous and a just man. Pope Francis also confirms it in his encyclical.

Sin and destruction came into this world by the disobedience of one family and God eradicated them and brought blessing by another family. St. Joseph, through his dreams, realized the will of God and obediently accepted the plan of God (Mt 1:20, 2: 13, 2:19, 2: 22). St. Joseph strongly believed that nothing is impossible by God. St. Joseph was kind and so concerned that no public disgrace would come to Mary by him but he quietly took part with Mary in the whole salvation history. Pope Saint John Paul II in his encyclical "Guardian of Salvation" says that the climax of the salvific history was expressed when Joseph and Mary exchange their mutual love.

St. Joseph might have had dreams about his future family life, but he was disappointed because Mary was conceived. Though it was so difficult to accept in human nature yet he, having realized the will of God, accepted Mary as his wife obediently and joyfully. He never raised any question or doubted against the will of God: Eg; when Jesus was born in the manger: when escaped to Egypt due to the fear of Herod; when Jesus was presented in the temple; when Jesus was lost and found out in the temple.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

There are 13 instances in the Gospels where St. Joseph's faithfulness to God and obedient are described. Apart from the gospels, the tradition of the church says many stories about St. Joseph. According to St. Bonaventure, the meaning of the word "Joseph'' is " he grows'' and he further says that human kind received salvation and blessing through St. Joseph as had the privilege of rearing the Son of God.

Joseph, in spite of, many sufferings, hardships and dangers believed and surrounded himself to God and His guidance. Pope Saint Leo XIII confirms in his encyclical that God, having believed St. Joseph, gave Jesus in his hand.

As the result of the participation of St. Joseph in the salvation history and faithfulness to God he became the Patron saint for many. Church also gives more place to St. Joseph and celebrates feasts, especially the feast of "Joseph, the spouse of Mary''.

The year of St. Joseph paves way and an amble chance for us to look into how we approach the will of God and submit ourselves to that and also to reflect whether we are accepting the will of God with deep faith and forwarding to the kingdom of God. It is also an opportunity for us to make and become aware of God's plan in our life too.

As the whole world is facing the pandemic, we are also most of the time confined to our home not knowing what is happing outside but it is an invitation for us to accept the will of God obediently and joyfully as St. Joseph accepted. St. Joseph lived a good exemplary life and full filed his part perfectly in the salvation history. Therefore, we are also invited to face our sufferings, hardships, failures and disappointments that come in our daily life and walk strongly in the will of God. May St. Joseph intercede for us.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## St. Joseph, the patron Saint of the Church and model of virtues

Saint Joseph is a great model of virtue for everyone and anyone. After the Blessed Virgin Mary, St. Joseph is highly venerated in the Catholic Church. As we all know, the present Pope Francis promulgated this year as the "Year of St. Joseph" for remembering the completion of the hundred and fifty years of promulgation that St. Joseph as the Patron Saint of the Church by Pope Pius IX. It is good to reflect on the virtue of St. Joseph especially in this year of Joseph. Although we do not have much explicit evidents about him, we see the great personality from little facts which are said in the Bible.

St. Joseph was called the Patron Saint of the Church because he protected the child Jesus, who is the founder and the head of the Church from all sorts of awkward situations, problems and even the danger of death. Hence, St. Joseph continues to defend the Holy Church of God from the snares of the enemy and from all adversity. We find some of his virtues. He was a righteous person, merciful father and God fearing person and head of the Holy Family. In the Twenty-First century, these virtues have completely vanished. It is very rare to see a person with all these qualities. So, this year gives us an invitation to lead a good life having the example of Joseph.

## Apostolic letter, *Patris Corde* of the Holy Father

The Apostolic Letter, *Patris Corde*, issued by Pope Francis on the occasion of the 150th anniversary of the declaration of Saint Joseph as Patron of the Catholic Church made by Blessed Pius IX, on December 8, 1870. After Blessed Virgin Mary, Mother of God, no other saint occupies as much space in the papal



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Magisterium as Joseph, her spouse, and alos in the life of the Church.

Pope Francis' reflections incorporate the message contained in the verses of the Gospels about Saint Joseph to further highlight his central role in salvation history: Blessed Pius IX declared him "*Patron of the Catholic Church*," Venerable Pius XII presented him as "*Patron of Workers*," and Saint John Paul II as "*Guardian of the Redeemer*."

Pope develops his letter on seven reflectional themes on Joseph as: he is A '*beloved father*'; '*A tender and loving father*'; '*An obedient father*'; '*An accepting father*'; '*A creatively courageous father*'; '*A working father*'; and '*A father in the shadows.*'

Pope Francis is convinced that in Joseph, Jesus saw the tender love of God.That is because Joseph doubted his own ability to do the things God asked him to do. The evil one makes us see and condemn our frailty, whereas the Spirit brings it to light with tender love.Tenderness is the best way to touch the frailty within us. Pointing fingers and judging others are frequently signs of an inability to accept our own weaknesses, our own frailty". Joseph was able to accept his own weaknesses and the Holy Father is sure this moulded the atmosphere in the life of the Holy Family. Joseph teaches us that faith in God includes believing he can work even through our fears, our frailties and our weaknesses. He also teaches us that we must never be afraid to let the Lord steer our course. At times, we want to be in complete control, yet God always sees the bigger picture. Joseph is a fine example, because he accepted Blessed Virgin Mary unconditionally. He trusted in the angel's words. His life teaches us to accept rather than to explain: he was not resigned to the inevitable, but a very proactive person. His example can teach us to set aside all anger and disappointment, and to



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

embrace the way things are, even when they do not turn out as we wish. Not with mere resignation but with Christian hope and spiritual courage. Joseph's approach can allow miracles to happen in our lives, and encourages us to accept and welcome others as they are, without exception, and to show special concern for the weak people, for God chooses what is weak. Pope insists that rather than expecting miracles from this great Saint

or making him a wonder worker, but it is very necessary to imitate him in following Jesus and fulfilling our own vocations.

## The Pandemic Encountered in the Bible and the Providence of God at the Present Situation in the midst of Covid-19

From the beginning of the biblical history there had been plagues and pandemic (Gen 11:5,10). This cruel crisis had induced wide reaching uncertainty in the life of Israelites (Ex 7). The combination of uncertainty and danger was a recipe for severe angst
(1 Ch 21; Num25:1-3).

The people of different times were longing for clarity and guidance in the midst of devastating pandemic, a "light at the end of the tunnel", a tunnel that would appear at that moment without end, where they had really experienced the healing touch of the Lord through their continuous faithful prayers and unfailing love manifested with the confession of their sins against their creator (Num 17:46; 2 Sam 24:25).

At present, the Coronavirus disease (COVID-19) is an infectious disease caused by a newly discovered coronavirus



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and this pandemic represents a completely unprecedented circumstance, as novel as it is life-changing in every nook and corner of the earth. No event in recent history has affected the world as profoundly and pervasively.

Not only does it remind of our physical fragility, it undermines economic security, throws daily routines topsy-turvy, wreaks havoc on plans and isolates one another from friends and neighbors. However, the hands of the good Lord is not taken away in the amidst of our uncountable suffering.

The providence of God is shown in ample ways and consoles us with the hoping against hope that the next cycle will finally provide the enlightenment that keeps eluding us. Although our lives seem distant and disjointed due to this pandemic, we are living through a period of deep disruption, chaos and anxiety, the things and people we hold most dear have been separated from us and the normal order of life has been utterly upended, we should always remember that God is always close and in this divine closeness we are one no matter what we face and how we face.

The absolute tenderness and perpetual closeness of God is shown through many good people in various spheres of their services. In all the chaos and fear, God is always close enough through these good men and we hear the divine whisper in our hearts.

**During St. Joseph's Year,**
**St. Joseph's directives for a liberated life**

Pope Francis, in his apostolic exhortation *(Patris corde)* to declare the year 2021 as St. Joseph's Year, has called for imitation of the fatherly faith and humanity of St. Joseph. He was moved by St. Francis of Assisi, and has called earlier



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

whole humanity - to protect its only home the earth and its nature *(laudato si)* as well as – to unite as one brotherhood to face challenges for survival *(Fratelli tutti)*. Hence St.Joseph's year is a fitting period to put into practice our responsabilities with a fatherly concern for the good of our human family and its home.

As Tamil Christians, though a minority, yet we have the responsibility to make our contribution towards the welfare and liberation of all people in Sri Lanka. Let us get away from silence and passivity of the past to realise our strategic importance of linking with Sinhalese and Muslim communities, and work for reconciliation and peace for all.

## Blessed Pope Pius IX

Pope Pius IX is the Pope who has reigned the longest in the history of the Church. He was born in a noble family in Italy in 1792, 13th of May and was named Giovanni Maria Mastai Ferreti. He had his primary education under his mother and then sent to Rome for his higher education. In his young age, he was suffering from epilepsy. He thought that it would be a hindrance to become a priest. But later on Pope Pius VII admitted him to continue his priestly studies. In 1819, 10th of April he was ordained a priest and sent to South America as the Ambassador of Papal State. Though this effort was unsuccessful, yet he stayed back there and learnt well the political affairs of the nation and then returned to Rome and was appointed as the director of St. Michael's Hospital. Later on he became the bishop of Umria and Imola. Seeing the revival and the well set administration of the bishop, Pope Gregory XVI raised him as a Cardinal.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

After the death of Pope Gregory XVI, Bishop Mastai Ferreti was unanimously elected as Pope. During his long period of reigning as Pope he made certain significant contributions to the church. Namely, the proclamation of the dogma of Immaculate Conception of Blessed Virgin Mary as ex cathedra teaching, convoking of 1st Vatican Council and proclamation of infallibility of Pope, issuing of syllabus of error and contribution to solve the confusion of abortion, that is from the moment of conception the human soul exists. Thus expulsion of the fetus is morally wrong.

Amidst of the trials, exiles and rejection his stand for truth is remarkable. Hence, he can be seen as liberal in heart and a conservative in faith.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாத்தாக்கள், பாட்டிகள் உலக நாளுக்காக**
**திருத்தந்தையால் பரிந்துரைக்கப்பட்ட செபம்**

ஆண்டவரே, உமது பிரசன்னத்தால் ஆறுதலாக இருப்பதற்கு நன்றி, தனிமையிலும்கூட நீரே எனது நம்பிக்கை, நீரே எனது பற்றுறுதி என் இளமைமுதல் நீர் என் பாறையாகவும், அரணுமாகவும் இருந்துவந்துள்ளீர்! ஒரு குடும்பத்தை, மற்றும், நீண்ட ஆயுளை எனக்கு அளித்ததற்காக உமக்கு நன்றி. மகிழ்ச்சியான, மற்றும், துன்பமான நேரங்களுக்காக, நிறைவேறியுள்ள கனவுகளுக்காக, மற்றும், இன்னும் எனக்கு முன்னால் இருக்கின்றவற்றிற்காக உமக்கு நன்றி.

நீர் என்னை எதற்காக அழைத்தீரோ, அந்த புதுப்பிக்கப்பட்ட பலனுள்ள இந்த நேரத்திற்காக நன்றி. ஓ ஆண்டவரே, எனது நம்பிக்கையை அதிகரித்தருளும், அமைதியின் கருவியாக என்னை ஆக்கியருளும் என்னைவிட அதிகம் துன்புறுவோரை வரவேற்க, கனவுகாண்பதை நிறுத்திவிடாமல் இருக்க, புதிய தலைமுறைகளுக்கு உம் வியப்புக்களை எடுத்துரைக்க எனக்குக் கற்றுத்தாரும், திருத்தந்தை பிரான்சிஸ், மற்றும் திரு அவையை பாதுகாத்தருளும், மற்றும் வழிநடத்தியருளும். அதனால் நற்செய்தியின் ஒளி, உலகத்தின் முடிவுகள்வரை எட்டும். ஓ ஆண்டவரே, உமது ஆவியை அனுப்பி இவ்வுலகைப் புதுப்பித்தருளும். அதனால், பெருந்தொற்றின் புயல் தணியும். வறியோர் ஆறுதல் பெறுவர். மற்றும் எல்லாப் போர்களும் முடிவடையும். பலவீனத்தில் என்னைத் தாங்கிப் பிடியும், உலக முடிவுவரை எந்நாளும் நீர் என்னுடன் இருக்கிறீர் என்ற உறுதியில், நீர் எனக்கு அளித்துள்ள ஒவ்வொரு நொடிப் பொழுதையும், முழுமையாக வாழ அருள்புரியும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் அரையாண்டு இதழ்
ஆண்டுச் சந்தா: உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 350/=
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 20
Euro 18

தனிப்பிரதி 115/=

தொடர்பு கொள்க:
**இறையியல் கோலங்கள்**
புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2482, 021 222 7145

## IRAI IYAL KOLANGAL

**A Tamil Theological Half - Yearly**
**Annual Subscription : Local (Incl.postage) Rs.350/=**
**Foreign (Incl.postage) U.S.$ 20**
**Euro 18**
**Single Copy Rs.115/=**

Correspondence to:
**Irai Iyal Kolangal**
St.Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna,
Srilanka
Tel : 021 222 2482, 021 222 7145

St. Joseph's Catholic Press, Jaffna. Phone: 021 222 2378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org